விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 29 வெள்ளிக்கிழமை (15.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 331

## தேர்தலில் வாக்களிக்கும் போது கவனமாக வாக்கை இடுங்கள்



### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்போது கவனமாக வாக்கை இடுமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய வாக்காளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் போது 23

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு

## நாடுமுழுவதும் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 23

## இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்

# ஜனாதிபதித் தேர்தல் நாளை

## தயார் நிலையில் தேர்தல் கண்காணிப்பு குழுக்கள்

(கொழும்பு)

இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் எட்டாவது ஜனாதிபதித் தேர்தல் நாளை 16ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தேர்தலை கண்காணிக்க தயார் நிலையில் தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் செயற்பட்டுவருகின்றன.

16 ஆம் திகதி நடைபெறவுள்ள எட்டாவது ஜனாதிபதித் தேர்தலுக்கு தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் அறிவித்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியம், பொது நலவாய அமைப்பு உட்பட சர்வதேச இயக்கங்களும், பல நாடுகளைச் சேர்ந்த 23

தேர்தலின் பின்

## சு.க தலைவர் மைத்திரியே



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவந்தவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரி 23

கடந்த ஆண்டுகளைவிட

## இம்முறை தேர்தல் வன்முறை குறைவு

– பப்ரல் அமைப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் குறைவாகவே பதிவாகியுள்ளதாக பப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகள் தொடர்பில் நேற்று பப்ரல் அமைப்பினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை 23

நீர்வேலியில்

## கிணற்றுக்குள் தவறிவிழுந்த குடும்பப்பெண் பலி

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறிவிழுந்த குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 23

## தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் பிரச்சினைகள் ஏற்படலாம்

### அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் ஆர்பாட்டங்களுக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதனால் தமது நாட்டு பிரஜைகளை அவதானமாக இருக்குமாறு அமெரிக்க தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னர் விடுக்கப்பட்ட 2ஆவது நிலை பயண ஆலோசனையில் எந்த மாற்றமும் இல்லை என் 23

வாக்குச் சாவடிகளுக்கு

## வாக்குப்பெட்டிகள் இன்று சென்றடையும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பெட்டிகள் இன்று காலை முதல் வாக்குச் சாவடிகளுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க 23

## ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தில் ஈடுபட்ட

### ஆசிரியர் ஒருவர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ள நிலையில், நேற்று சட்டவிரோதமாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட பெண் ஒருவர் உட்பட 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கொழும்பு நகர பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் பாடசாலைகளில், ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் பிரசார பிரசுரங்களை விநியோகித்த போது கைது செய்யப்பட்டார். 23

## மோட்டார் சைக்கிள் - டிப்பர் நுணாவிலில் மோதுண்டு விபத்து

### இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிளும் டிப்பரும் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் ஏ9 வீதி நுணாவில் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் இராசிங்கம் வீதி யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அடைக்கலநாதன் லக்கி (வயது 35) என்பவரே மரணமடைந்தவராவார். 23

## துன்னாலையில் கசிப்பு பிடிக்க சென்ற இரண்டு பொலிஸார்

### பெண்களால் சிறைபிடிக்கப்பட்டதாக தெரிவிப்பு

(கரணவாய்)

கசிப்பு பிடிக்கச் சென்ற இரண்டு பொலிஸாரை அப்பகுதியைச் சேர்ந்த ஒரு சில பெண்களால் சிறைபிடித்த சம்பவம் ஒன்று வடமராட்சி துன்னாலைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. 23

## மகிந்த தேசப்பிரியவை பதவி விலகக்கோரி உண்ணாவிரதம் இருந்த தம்பிராசா கைது

(யாழ்ப்பாணம்)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவை பதவி விலகுமாறு கோரி யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக நேற்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசா பொலிஸாரினால் கைது செய்யப்பட் டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தபால் மூல வாக்களிப்பின்போது, கொழும்பு மாவட்டத்தில் உள்ள தபால் 23



## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வல்லைவெளியில் விபத்து; இளைஞன் படுகாயம்

(கரணவாய்)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் வாகன சாரதியாக கடமையாற்றிய இளைஞர் ஒருவர் விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இரவு வடமராட்சி வல்லைவெளிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தற்போது மாகாண சபையில் சாரதியாக கடமையாற்றி வரும் பிலாவடி ஒழுங்கை, புலோலி தெற்கைச் சேர்ந்த திருச்செல்வம் நிரோஜன் என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

வேலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வல்லைவெளியில் எதிரே வந்த லொறி மோதியதாக கூறப்படுகிறது.

இதில் கால் பகுதியில் பலத்த காயமடைந்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (ம-3,60)

## கட்டாக்காலி மாடுகள் ஏல விற்பனை

புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்துக் குட்பட்ட கறுக்காய்க்குளம் கமக்காரர் அமைப்பின் பிரிவில் உள்ள வயலில் பயிரழிவில் பிடிக்கப்பட்ட "இரண்டு பசு மாடுகள்" குறி (K.T) (K.J80) கறுக்காய் குளம் கமக்காரர் அமைப்பின் பாதுகாப்பில் உள்ளது. உரிமையாளர்கள் உரிய தண்டப்பணத்தினை செலுத்தி எதிர்வரும் 19.11.2019ம் நாள் மதியம் 12.00 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் மாடுகள் 19.11.2019ம் திகதி கறுக்காய்க் குளம் கமக்காரர் அமைப்பின் பொதுப்பட்டியில் வைத்து பி.ப 2.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

**தகவல்:- கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**கமநல சேவை நிலையம், புளியம்பொக்கணை.** (C-8235)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 25 - 02 - 1934



மறைவு 13 - 11 - 2019

திருமதி

**குணபூவதி அரியரட்ணம்** (மணி அம்மா)

(உடுவில் தெற்கு யாமா சந்தி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

எமது ஆலயத்தின் திருப்பணி வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய திருமதி **அரியரட்ணம் குணபூவதி** அவர்களின் மறைவினால் துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாக சபையினர், ஆலய சமூகத்தினர்**
**புதுமடம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், மானிப்பாய்.**

(974)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் தமிழகத்தின் தலைசிறந்த பேராசிரியர்களில் மூத்த பேராசிரியை அருள்நிதி **இந்திரா சண்முகசுந்தரம்** அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- **எளியமுறை உடற்பயிற்சிகள்**
- **எளியமுறை தியானப்பயிற்சிகள்**
- **காயகல்ப்பப் பயிற்சிகள்**
- **அகத்தாய்வுப் பயிற்சிகள்**

காலம்: :16.11.2019 சனிக்கிழமை தொடக்கம் 22.11.2019 வெள்ளிக்கிழமை வரை

நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள் : மனவளக்கலை பேராசிரியர் **ச.இந்திரா**
(இந்தியா,தமிழ்நாடு) மனவளக்கலை பேராசிரியர்
**ஆ.சுப்பிரமணியன்** (B.Sc.Physics, M.A.YHE)
துணைப்பேராசிரியர் **த.நந்தகுமரன்**

அகத்தாய்வு 2ம் நிலை 16.11.2019 சனி மற்றும் 17.11.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல: 021 222 2772

(C-8232)

**Faculty of Management Studies & Commerce**
**University of Jaffna - Sri Lanka**

## Academic Activities

2nd half semester of the academic year 2017/2018 will be commenced on: 18.11.2019.

The lecture programmes for the **3rd and 4th year** students will be held at **faculty new premises** located at 10th Lane, Kalasalai Road, Thirunelveli.

1st & 2nd year lectures will be held at usual place (Main Premises)

**The Registrar,**
University of Jaffna.

(C-8230)

## மணிவிழா வாழ்த்து



எமது பாடசாலையில் 26 வருடங்களாக கல்வி சாரா ஊழியராக கடமையாற்றி இன்று (15.11.2019) மணிவிழாக் காணும்

**திரு. சங்கரப்பிள்ளை லோகநாதன்**


அவர்களை எல்லாம் வல்ல வேம்படி விநாயகரின் அருள் பெற்று ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.**

(972)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 27 - 07 - 1935



இறப்பு 16 - 10 - 2019

அமரர் **மாதவர் கோவிந்தர்**

பண்புடனும் பாசமுடனும் எம்மை வளர்த்தீர்
பரிதவிக்க விட்டு எங்கே சென்றீர்
கண் முன்னே வாழ்ந்த வாழ்வின் நினைவுகள்
கனவாகிப் போனாலும்
எங்கள் மனதில் உங்கள் நினைவுகள்
என்றும் நிலைத்திருக்கும்.

அமரர் **மாதவர் கோவிந்தர்** அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (15.11.2019) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.

தகவல்:- குடும்பத்தினர்
0776111277

(C-8234)

# மௌன காலத்தில் கமராக்கள் கண்காணிக்கும்

## தேர்தல் சட்டங்களை மீறினால் உடன் கைது-ருவான் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்தன. இந்த மௌன காலத்தில், தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுபவர்கள், கமரா காணொலியின் ஊடாக இனங்காணப்பட்டு கைதுசெய்யப்படுவர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர எச்சரித்தார்.**



பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார், "மௌன காலத்தில் வேட்பாளர்களுக்கான ஆதரவை மேம்படுத்தும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுக்க முடியாது. பேரணிகள், வீடுகளுக்குச் சென்று பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது" என்றும் அவர் தெரிவித்தார்.

"அத்துடன், சமூக வலைத்தளங்கள் கண்காணிக்கப்பட்டு பாரதூரமான விடயங்கள் அவதானிக்கப்பட்டால் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் எச்சரித்தார்.

"பொதுமக்கள், எந்தவித அழுத்தங்களுமின்றி சுதந்திரமான தீர்மானத்தை மேற்கொண்டு வாக்களிப்பதற்கும், தேர்தலை அண்மித்த நாட்களில் நாட்டின் அமைதியைப் பேணுவதற்கும் இந்த மௌன காலம் அமுல்படுத்தப்படுவதுடன், தேர்தல் பெறுபேறுகள் வெளியாகிய பின்னர் சுமார் ஒரு வாரம் வரையிலும், பிரசாரக் கூட்டங்கள், பேரணிகள் உள்ளிட்டவற்றை முன்னெடுப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது". இதேவேளை, "குறித்த காலத்தில் விதிமுறைகளை மீறி தேர்தல் பிரசாரங்கள், பேரணிகள் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் கமராவுடன் தயாராக இருக்கும்பொலிஸார் அதனைக்காணொலியாகப் பதிவுசெய்வார்கள். அதன்பின்னர் அனைத்து சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டு கைதுசெய்யப்படுவார்கள். இவ்வாறு விதிமுறைகளை மீறுபவர்களுக்கு சிறைத் தண்டனை பெற்றுக்கொடுக்கவும் முடியும்".

"பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் பொலிஸ் தலைமையகத்தில் இருந்து 9 மாவட்டங்களுக்கு 9 பிரதி பொலிஸ்மா அதிபர்கள் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க அனுப்பிவைக்கப்படவுள்ளனர்" எனத் தெரிவித்த ஊடகப் பேச்சாளர், "தேர்தல் பெறுபேறுகள் வெளியாகும் வரை அவர்கள் அங்கு பணிகளை முன்னெடுப்பார்கள்" எனவும் தெரிவித்தார்.

"வாக்காளர் எண்ணிக்கை, பிரதேசம், வசதிகளைக் கருத்திற்கொண்டு கிளிநொச்சி, மன்னார், பொலநறுவை, கேகாலை, மாத்தளை, மொனராகலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இந்தப் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்" என்றும், அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தனியார் பேருந்து துறையில் புரட்சிகர வலையமைப்பு சேவை ஆளுநர் தலைமையில் அறிமுகம்





(யாழ்ப்பாணம்)

வடமாகாண மக்களுக்கு போக்குவரத்தில் உலகத்தர சேவையை வழங்கலே தனது கனவாகும் என தனியார் பேருந்து துறையில் புரட்சிகர வலையமைப்பு சேவையின் அறிமுக நிகழ்வில் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார். வரையறுக்கப்பட்ட யாழ்.தூர சேவை பேருந்து உரிமையாளர்களின் நிறுவன அனுசரணையுடன் ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த அறிமுக நிகழ்வில் பேருந்து உரிமையாளர்களுக்கான பற்றுச்சீட்டு இயந்திரங்கள் ஆளுநரால் வைபவ ரீதியாக வழங்கப்பட்டன.

முதற்கட்டமாக யாழ்.தூர சேவை உரிமையாளர்களுக்கும் அடுத்த கட்டமாக வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலுள்ள சங்கங்களின் பேருந்து உரிமையாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. Qbus எனும் இந்த வலையமைப்பு அறிமுக நிகழ்வில் பருவகால அட்டை மற்றும் இலத்திரனியல் பற்றுச்சீட்டு என்பன அறிமுகம் செய்யப்பட்டதுடன் செயற்றிறன் மிக்க ஒருங்கிணைக்கப்பட்ட நேரமுகாமைத்துவத்துவம், கையடக்கதொலைபேசி ஊடாக அனைத்துச் செயற்பாடுகளையும் கண்காணித்தல் மற்றும் செயற்படுத்தும் முறைமையுடன் கூடிய பயணிகளுக்கு உயர் திறன் மிக்க பாதுகாப்பான தரமான சேவையை வழங்கல் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த சேவையானது முதற்கட்டமாக யாழிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் 42 தனியார் பேருந்துகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. ஒரு வருடகாலத்தில் இது வடமாகாணம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் உள்ளூர் சிற்றூர்திகளிலும் இவை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பேருந்து கண்காணிப்பு கருவியின் மூலம் பேருந்து அநாவசியமாக ஒரு தரிப்பிடத்தில் தரித்திருப்பின் அதனை அவதானிக்கக்கூடியதாகவும் இதன்மூலம் நேரத்திற்குப் பயணத்தை மேற்கொள்ளவும் முடியும். பேருந்து உரிமையாளர்களுக்கு உடனுக்குடன் பேருந்தின் அன்றைய நாள் வருமானத்தை கணக்கிடமுடிவதுடன் GPS என்ற கருவி பொருத்தல் மூலம் பேருந்தின் சகல நடவடிக்கைகளையும் சங்கமும் உரிமையாளர்களும் கண்காணிக்க முடியும். அத்துடன் சாரதி, நடத்துநர்களின் செயற்பாடுகளும் இதன் மூலம் கண்காணிக்கப்படும்.

ஆளுநர் மேலும் குறிப்பிடுகையில்,

65 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு பேருந்து பயணத்தின்போது விசேட பேருந்துக் கட்டண கழிவுகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான வசதிகளும் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பயணிகள் பேருந்து நடத்துநரிடம் பயணத்திற்கான பற்றுச்சீட்டு மற்றும் மிகுதிப்பணத்திற்கு முரண்படவேண்டியதில்லை.

இதன்மூலம் அனைத்து பேருந்து போக்குவரத்துக்களும் ஒழுங்காகவும் நேர்த்தியாவும் நடைபெற வாய்ப்புள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர், வடமாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர், தனியார் பேருந்து சங்கத் தலைவர் மற்றும் வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.(இ-5-7)

# அவன்கார்ட் வழக்கு விசாரணை பெப்ரவரி 14 மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

355 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ மற்றும் அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதிக்கு எதிராக இலஞ்ச ஆணைக் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மேலதிக சாட்சி விசாரணைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நிதிமன்ற நீதிபதி ஷசி மகேந்திரன் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது, விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க யாபா சேனாதிபதி சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி வரை வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்டார்.

இதேவேளை அன்றைய தினம் சாட்சியாளர்களை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிபதி அழைப்பாணை விடுத்தார்.(இ-7)

# இதுவரை 3821 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 3800 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

அதன்படி, கடந்த மாதம் 8 ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் மாலை 4 மணி வரை 3821 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

வன்முறைச்சம்பவங்கள் தொடர்பில் 27 முறைப்பாடுகளும் மற்றும் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் 3687 முறைப்பாடுகளும் அவற்றுள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினத்தில் மாத்திரம் 92 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவை அனைத்தும் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் பதிவாகியுள்ளதாகவும்தேர்தல்கள்ஆணைக்குழு தெரிவித்தது. (இ-7)

# அதிவேகமாக 250டெஸ்ட் விக்கெட்டை கைப்பற்றி அஸ்வின் சாதனை




வங்காளதேச அணிக்கெதிராக முதல் விக்கெட்டை வீழ்த்தியன் மூலம் சொந்த மண்ணில் நடைபெற்ற டெஸ்டில் அதி வேகமாக 250 விக்கெட்டுக்கள் வீழ்த்திய- வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் அஸ்வின்.

இந்தியா - வங்காளதேசம் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் இந்தூரில் நடைபெற்று வருகிறது. முதலில் பேட்டிங் செய்த வங்காளதேசம் 150 ரன்னில் சுருண்டது. இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

முதல் விக்கெட்டாக மொமினுல் ஹக் கிளீன் போல்டு மூலம் வீழ்த்தினார். இது அஸ்வினுக்கு இந்தியாவில் நடைபெற்ற டெஸ்டில் கைப்பற்றிய 250-வது விககெட்டாகும்.

இந்த விக்கெட்டுக்களை வீழ்த்த அவருக்கு 42 போட்டிகளே தேவைப்பட்டது. இதன்மூலம் சொந்த மண்ணில் அதிக வேகமாக 250 விக்கெட்டுக்கள் வீழ்த்திய வீரர் என்ற சாதனையை முரளிதரனுடன் பகிர்ந்துள்ளார்.

அனில் கும்ளே 43 டெஸ்ட் போட்டிகளில் 250 விக்கெட்டுக்கள் வீழ்த்தி 2-வது இடத்தில் உள்ளார். ரங்கண ஹேரத் 44 போட்டிகளிலும், ஸ்டெயின் 49 போட்டிகளிலும், ஹர்பஜன் சிங் 51 போட்டிகளிலும் 250 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளனர்.

# ரி20 போட்டி டெஸ்ட்டுக்கான அளவுகோல் அல்ல- சச்சின் கருத்து



ரி20 போட்டியில் சிறப்பாக விளையாடிவிட்டால் அவர்களை டெஸ்ட் போட்டிக்கு தேர்வு செய்யலாம் என்ற அளவுகோல் வைக்க முடியாது. இதில் வேகப் பந்து வீச்சாளர் பும்ரா மட்டுமே விதிவிலக்கு என்று சச்சின் டென்டுல்கர் விளாசியுள்ளார்.

சச்சின் டென்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமாகி இன்றுடன் 30 ஆண்டுகள் ஆகிறது. கடந்த 1989-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-தேதி சச்சின டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமாகினார்.

டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு வீரர்களைத் தேர்வு செய்ய ஐபிஎல் போட்டி அளவுகோலா என்பது குறித்து சச்சின் டென்டுல்கர் நிருபர்களுக்குப் பேட்டி அளித்துள்ளார். அவர் கூறியதாவது:

ஐபிஎல் போட்டியில் ஒருவீரர் சிறப்பாக விளையாடிவிட்டால் அவரை ஒருநாள் போட்டிக்கும், டெஸ்ட் போட்டிக்கும் தேர்வு செய்வதை ஏற்க முடியாது. இதில் சில வீரர்கள் வேண்டுமானால் விதிவிலக்காக இருக்கலாம். குறிப்பாக ஜஸ்பிரித் பும்ராவைப் போன்ற வீரர்கள் இருக்கலாம்.

நான் நினைக்கிறேன் சிலர் ஐபிஎல் போட்டியில் சிறப்பாக விளையாடிவிட்டால் அவர் இந்திய ரி20 அணிக்குத் தகுதியானவர் என நினைக்கிறார்கள். இது சரியானதுதான். ஆனால், சிலர் ஐபிஎல் போட்டியில் சிறப்பாக விளையாடிவிட்டு, அந்த திறமையின் அடிப்படையில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கும், ஒருநாள் போட்டிக்கும் தேர்வு செய்வது கேள்விக்குறியானது.

இதுபோன்ற தேர்வுமுறையை நான் ஆதரிக்கமாட்டேன். ஒருசிலருக்கு மட்டுமே அற்புதமான ஆற்றல் இருக்கும். அனைத்து வகையான போட்டிகளிலும் சிறப்பாக விளையாடக் கூடியவர்களாக இருப்பார்கள். மற்ற வகையில் சராசரி வீரர்கள், ஐபிஎல் போட்டிகளில் சிறப்பாக விளையாடினால், அதை ரி20 போட்டிக்கு மட்டுமே அளவுகோலாக எடுக்க வேண்டும்

கடந்த 1998-ம் ஆண்டு நடந்த அவுஸ்திரேலிய டெஸ்ட்தொடருக்காக நான் மிகக்கடினமாகத் தயாரானேன். அந்த டெஸ்ட் தொடர் எனக்கும் வார்னேவுக்கும் இடையிலான போட்டியாகப் பார்க்கப்பட்டது. அந்த தொடரில் ஷேன் வார்ன் நிச்சயம் என்னை ரவுண்ட் த விக்கெடில் குறிவைப்பார் என்று எதிர்பார்த்தேன். அதனால் நான் மும்பை பந்துவீச்சாளர்களான சாய்ராஜ் பகதுலே, நிலேஷ் குல்கர்னி ஆகியோரை வலைப்பயிற்சியில் பந்துவீசக் கூறி பயிற்சி எடுத்து தயாராகினேன்.

நான் எப்போதும் ஒப்பிட்டு பேசுவதில் விருப்பமற்றவன். ஆனால், நீங்கள் என்னிடம் கேட்டால், பெர்த் நகரில் அடித்த சதம் என்னைப் பாதித்தது. எந்த ஆடுகளத்திலும் இறங்கி அடிக்கும் துணிச்சலை அளித்தது. சர்வதேச கிரிக்கெட்டில் என்னுடைய வருகையை நான் சத்தம்போட்டு அறிவிக்க அந்த சதம் எனக்கு உதவியது, அறிவிக்கவும் விரும்பினேன்.

கடந்த 1991- ஆண்டு பெர்த்தில் நான் அடித்த சதத்தை எதனுடனும் ஒப்பிட முடியாது. என் வாழ்வில் மறக்க முடியாது.

சென்னையில் 1999-ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக முதுகு வலியோடு நான் அடித்த சதம், 2004-ம் ஆண்டில் சிட்னியில் அடித்த இரட்டைச் சதம், 2011-ம் ஆண்டு கேப்டவுனில் டேல் ஸ்டெயினுக்கு பந்துவீச்சை எதிர்கொண்டு விளையாடியது அழகும், சவாலும் நிறைந்தது அந்த நினைவுகள் மறக்க முடியாதது.

நான் ஒருவீரர்தான் பல தலைமுறை வீரர்களுடன் விளையாடி இருக்கிறேன். கபில் தேவ், ரவி சாஸ்திரி, ஸ்ரீகாந்த், திலிப் வெங்சர்க்கார், முகமது அசாருதீன் ஆகியோருடன் விளையாடி இருக்கிறேன்.

என்னுடைய தலைமுறையில் கங்குலி, ராகுல் திராவிட், யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், ஜாகீர் கான், சேவாக், நெஹ்ரா ஆகியோருடன் விளையாடினேன்.

அதன்பின் ரெய்னா, விராட்கோலி, ரோஹித் சர்மா, ரஹானேஆகியோருடன் நான் விளையாடி இருக்கிறேன். இவர்கள் அனைவரையும் நான் இழக்கிறேன். இவர்களின் புன்னகை, தீவிரம், கொண்டாட்டம், கிண்டல், நகைச்சுவை, விளையாட்டு அனைத்தையும் இழக்கிறேன். எங்களுடைய ஓய்வு அறை எனக்கு ஒரு கோயில் இவ்வாறு சச்சின் தெரிவித்தார்

# மகளிர் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு தெல்லிப்பளை மகாஜனா மாணவி தெரிவு

மகளிர் தேசிய உதைபந்தாட்ட அணியில் தெல்லிப்பளை மகாஜனா மாணவி சானு தெரிவு செய்யப் பட்டுள்ளார். தற்போது தேசிய அணி பயிற்சிப் போட்டிக்காக இந்தோனேசியா சென்றுள்ளது. டிசெம்பர் மாதம் நேபாளத்தில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் போட்டிக்காக இப் பயிற்சிநெறி நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. வடமாகாணத்தில் இருந்து மகளிர் தேசிய உதைப்பந்தாட்ட அணிக்காக தெரிவு செய்யப்பட்ட முதல் வீராங்கனையாக செல்வி பாஸ்கரன் சானு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.




செல்வி - பாஸ்கரன் சானு

# பத்து வருடங்களுக்கு பின்னர் பாகிஸ்தான் மண்ணில் டெஸ்டில் விளையாடும் இலங்கை



நீண்டதொரு சர்ச்சைக்கு பிறகு பாகிஸ்தானுக்கு மட்டுப் படுத்தப்பட்ட போட்டித் தொடரில் விளையாடுவதற்கு சென்ற இலங்கை கிரிக்கெட் அணி, மீண்டும் அங்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதன்படி சுமார் 10 வருடங் களுக்கு பிறகு பாகிஸ்தான் மண்ணிற்கு சென்று இலங்கை கிரிக்கெட் அணி, டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளது. இதனை இலங்கை கிரிக்கெட் சபையும் உறுதிப் படுத்தியுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் டிசம்பர் மாத முற்பகுதியில் இலங்கை கிரிக்கெட் அணி, பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டி, டிசம்பர் 11ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை ராவல்பிண்டி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி, டிசம்பர் 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கராச்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு அங்கமாக அமையவுள்ளது.

அண்மையில் ஒருநாள் மற்றும் ரி-20 தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டது.

நான்கு வருடங்களின் பின்னர் பாகிஸ்தானில் முழுமையான ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்கள் நடைபெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இத்தொடரில், இலங்கை அணியின் பல முன்னணி வீரர்கள் பாகிஸ்தான் சென்று தயக்கம் காட்ட, ஒருநாள் தொடருக்கு லஹிரு திரிமன்னவும், ரி-20 அணிக்கு தசுன் ஷானகவும் தலைமை தாங்கினர்.

இதில் முதலில் நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி, 2-0 என கைப்பற்றியது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை இலங்கை அணி, முழுமையாக கைப்பற்றியது.

எனினும், இந்த சுற்றுப்பயணத்தின் போது சில சர்ச்சையான விடயங்களும் இடம்பெற்றிருந்தது. குறிப்பாக சுற்றுப்பயணத்தின்போது இலங்கை வீரர்களின் சுதந்திரம் பெரிதும் பாதிக்கப்பட்டதாக கருத்து நிலவியது. தற்போது இதுபோன்ற சம்பவங்கள் நிகழாது போன்ற உறுதி மொழியையும் பாகிஸ்தான் வழங்கியுள்ளதாக தெரிகிறது.

கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் இலங்கை அணி வீரர்கள் சென்ற பேருந்து மீது துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலில் ஆறு வீரர்கள் காயமடைந்தனர். இந்த சம்பவத்தில் ஆறு பாகிஸ்தான் பொலிஸார் மற்றும் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதனால், பாகிஸ்தானிற்கு சென்று விளையாட சர்வதேச அணிகள் தயக்கம் காட்டின. ஆனாலும் கடும் முயற்சிகளை மேற்கொண்ட பாகிஸ்தான், 2015ஆம் ஆண்டு சிம்பாவேயை பாகிஸ்தான் வரவழைத்து கிரிக்கெட் தொடரிலும் விளையாடி, வீரர்களுக்கு பணப்பரிசினையும் பரிசளித்தது.

இதன்பிறகு, 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் நிலை இலங்கை அணி பாகிஸ்தானில் ஒரேயொரு ரி-20 போட்டியில் விளையாடியது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஐ.சி.சி. உலக பதினொருவர் அணி மற்றும் மேற்கிந்திய தீவுகளும் பாகிஸ்தானில் குறுகிய கால ரி-20 சர்வதேச தொடர்களில் விளையாடின.

இவ்வாறான கடுமையான முயற்சிகளை பாகிஸ்தான் மேற்கொண்ட போதும், பாகிஸ்தான் மீது நம்பிக்கையில்லாத சர்வதேச அணிகள், அங்கு சென்று விளையாட, தொடர்ந்தும் தயக்கம் காட்டின.

ஆனர்ல், உலகளவில் தனிமைப்படுத்தப்பட்ட பாகிஸ்தானுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் தற்போது பாகிஸ்தான் சென்று, இலங்கை அணி விளையாடவுள்ளது.

எந்த அணி பாகிஸ்தான் சென்றபோது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினோர்களோ, அதே அணி தற்போது துணிச்சலுடன் பாகிஸ்தான் சென்றுள்ளதனை, பலரும் பாராட்டியுள்ளனர்.

# ரோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு; சட்டமா அதிபர், நீதியமைச்சின் பரிந்துரைகள் பெறப்பட்டதா?

## சாலிய பீரிஸ் கேள்வி

(கொழும்பு)

ரோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்குப் பொதுமன்னிப்பு வழங்கும் போது, அவரால் மிகவும் குறைந்த வயதிலேயே கொல்லப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர் தொடர்பில் எந்தவிதத்திலும் கவனம் செலுத்தப்படவில்லை. அத்தோடு இப்பொதுமன்னிப்பு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதியமைச்சு ஆகியவற்றின் பரிந்துரைகள் பெறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை என்று காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

ரோயல் பார்க் கொலைக் குற்றவாளி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டமைக்கு சாலிய பீரிஸ் ஏற்கனவே கண்டனம் வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் அப்பொதுமன்னிப்பிற்கான நியாயப்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையைச் சுட்டிக்காட்டி, அவருடைய பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றைச் இட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ரோயல் பார்க் குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கின்றது. இக்கொலைக் குற்றவாளிக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையானது நீதியமைச்சின் கீழ் ஓய்வுபெற்ற நீதியரசர்கள் மூவர் மற்றும் வல்லுநர்கள் அடங்கிய குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் ஏற்கனவே ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுவிட்டது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரரின் தலையீட்டின் ஊடாக ஜனாதிபதிக்கும் குற்றவாளியின் குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இவ்விடுதலை குறித்து பல்வேறு மத அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதேவேளை ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ரோஹிணி மாரசிங்கவினால் இது தொடர்பில் பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டி ஜனாதிபதிக்குக் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது என்று ஜனாதிபதி செயலக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.



மேலும் கொலை இடம்பெற்ற போது குற்றவாளியின் இளம் வயது (19), சிறையில் அவர் பெற்றுக்கொண்ட புனர்வாழ்வு மற்றும் சிறையிலிருந்த காலத்தில் கல்வித்துறையில் அடைந்துகொண்ட சாதனைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு குற்றவாளிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியிருப்பதாகவும், அத்தோடு ரோயல் பார்க் கொலையானது மிகுந்த ஆத்திரத்தின் விளைவாக இடம்பெற்றது என்றும் குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கருணை மற்றும் இரக்கத்தின் பெறுமதியே இங்கு கருத்தில் கொள்ளப்பட்டிருப்பதாக அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது.

இவற்றிலிருந்து பின்வரும் விடயங்கள் தெளிவாகின்றன:

குற்றவாளிக்குப் பொதுமன்னிப்பு வழங்கும் போது, அவரால் மிகவும் குறைந்த வயதிலேயே கொல்லப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர் தொடர்பில் எவ்விதத்திலும் கவனம் செலுத்தப்படவில்லை.

அதேபோன்று எவ்வாறு கொலை நடந்திருக்கின்றது என்பதும் குற்றவாளியை விடுதலை செய்யும் போது கருத்திற்கொள்ளப்படவில்லை. ஏனெனில் இக்கொலையானது சடுதியாக ஏற்பட்ட கடும் ஆத்திரத்தினால் இடம்பெற்றது என்பதை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருக்கிறது. அதுமாத்திரமன்றி கொலையானது மிகவும் கொடூரமானதும், இயல்பிற்கு முரணானதுமான வகையில் இடம்பெற்றிருப்பதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது.

மேலும் குற்றவாளி குறைந்த வயதினராக இருக்கின்றார் என்ற கோணத்தில் இவ்விடயத்தை அணுக முடியாது. ஏனெனில் குறைந்த வயதில் மேலும் பல கைதிகள் மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோன்று மேலும் சில மரண தண்டனைக் கைதிகள் வயது முதிர்ந்தவர்களாக உள்ள அதேவேளை, அவர்கள் வெகுவாக நோய்வாய்ப்பட்டவர்களாகவும் அங்கவீனர்களாகவும் இருக்கின்றார்கள்.

அடுத்ததாக ஏனைய குற்றவாளிகளின் குடும்ப உறுப்பினர்கள் அதிகாரத்தில் உள்ளவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டிருக்குமானால் அவர்களும் தமது கவலைகள் மற்றும் நியாயப்பாடுகளைக் கூறியிருப்பார்கள். அவர்களும் பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களிலிருந்து பரிந்துரைகளைப் பெற்று வந்திருப்பார்கள்.

இப்பொதுமன்னிப்பு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதியமைச்சு ஆகியவற்றின் பரிந்துரைகள் பெறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. எனவே குறிப்பாக இது குற்றவாளிக்கான தண்டனைக் குறைப்பல்ல. மாறாக முழுமையான விடுதலையாகவே கருதப்பட வேண்டியிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வேட்பாளரை விமர்சித்து நூல் வெளியிட்ட ஊடகவியலாளருக்கு கத்திக்குத்து



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் குறித்து நூலொன்றை வெளியிட்ட ஊடகவியலாளர் ஒருவர் இனந்தெரியாதவர்களின் கத்திக்குத்து தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்தார்.

வீண்டிக்கப்பட்ட அபிவிருத்தியும் ஊழலும் என்ற நூலை வெளியிட்டு தேர்தலில் போட்டியிடும் மற்றொரு வேட்பாளருக்கு வழங்கிய லசந்த விஜயரட்ன என்ற சுயாதீன ஊடகவியலாளரே நேற்று இனந தெரியதாவர்களின் கத்திக் குத்திற்கு இலக்காகியுள்ளார்.

அவரது வீட்டிற்குள் நுழைந்த நால்வர் மனைவியின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டியபின்னர் கத்திக்குத்தை மேற்கொண்டனர் என விஜயரட்னவின் சட்டத்தரணி தெரிவித்தார்.

அவர்கள் வீட்டின் தளபாடங்களை அடித்து நொருக்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறினர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் வெற்றி வாய்ப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் ஊடகவியலாளர் செயற்பட்டார் எனத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் குற்றம் சாட்டினார்கள் என சட்டத்தரணி தெரிவித்தார்.

காலியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்தத் தாக்குதல் குறித்து தகவல் கிடைத்ததாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்தது. (இ-7)


ஓம் ஸ்ரீ சாயிராம்

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 • 08 • 1949



உதிர்வு 15 • 11 • 2006

(946)

திதி பூர்வபட்ச ஏகாதசி

### திருமதி நேசமலர் சின்னத்துரை

(மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்டவர்)

தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி தரணியில் தலைநிமிர வைத்த தங்க அம்மாவே. கண்ணெனக் காத்த கண்மணியே ஆண்டு பதின்மூன்று ஆனாலும் உங்கள் அன்பு முகத்தை மறக்க முடியவில்லையே அம்மா. உங்கள் நினைவுகள் எம் மனதைவிட்டு என்றும் அகலாது நிறைந்திருக்கும். உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கரைப்பிரான் ஆதி விநாயகர் பெருமானை வேண்டுகிறோம்.

021 221 3058

என்றும் உம் நினைவுடன்:
கணவர்,பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## கண்ணீர் அஞ்சலி



அமரர் செல்வி.
கிருபைநாதன் சஞ்சீனா

மண்ணில் 01.11.2009
விண்ணில் 13.11.2019

அன்பான பூவே
உன்னை பூமிக்கு
வேண்டாம் என்று
ஆண்டவன் அழைத்துக்
கொண்டான்
அரவணைத்த உறவுகள்
இங்கே
அலறித்துடிக்குதம்மா
உன் பள்ளி தோழர் இங்கே
உன்னைத்தான் தேடுகின்றார்.

(C-8229)

எமது பாடசாலை மாணவியின் திடீர் மறைவையொட்டி ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவித்துக்-கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

# மது போதையில் சாரத்தியம்; ஒரு இலட்சம் ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

மது போதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளை செலுத்திய இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுகப்பட்டு குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (இ-5-114)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் உரிமை கோரப்படாது அரசுடைமையாக்கப்பட்ட பசுமாடு ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் நெல்லியடி பொலிஸ் நிலைய வளாகத்தில் வைத்து ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. இவ் ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்பும் பொதுமக்கள் பின்வரும் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் பசுமாட்டினை பதிவாளரின் அனுமதியுடன் பொதுமக்கள் பார்வையிடமுடியும்.

ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏலவிற்பனையின்போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏலவிற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப்பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

# மத்தியஸ்த சபை அமர்வுகள் நாளை நடைபெற மாட்டாது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக இல. 274, மத்தியஸ்த சபை அமர்வுகள் நாளை மறுதினம் 17.11. 2019 ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நடைபெறமாட்டாது. தொடர்ந்து அமர்வுகள் வழமை போன்று கந்தர்மட சிவப்பிரகாச வித்தியாலயத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் என நல்லூர் மத்தியஸ்த சபை தவிசாளர் திருமதி. தர்மினி அறிவித்துள்ளார். (இ-7)

# "ஒளிரும் நட்சத்திரங்கள்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

க.பரணீதரனின் "ஒளிரும் நட்சத்திரங்கள்" (20 ஆளுமைகள் பற்றிய பதிவுகள்) நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் அல்வாய் கலையகத்தில் சாகித்தியரத்னா தெணியான் தலைமையில் நடைபெறும்.

இதில் எழுத்தாளர்களான வெ.துஷ்யந்தன், இ.சு.முரளிதரன், த.அஜந்தகுமார், புலோலியூர் வேல் நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

# ரேவதி நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

**அதிர்ஷ்ட ஜோதிடம்**

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசி – மீனம் ஆகும். அதன் அதிபதி – குரு ஆவார். அதன் சின்னம் – மீன் ஆகும். ரேவதி நட்சத்திரத்தின் அதிபதி – புதன் ஆவார். அதன் சின்னம் – பெண் யானை ஆகும். எனவே இவர்கள் நல்ல புத்திசாலியாகவும் நேர்மையாகவும் கல்வி ஞானம், கலைஞானம் உள்ளவர்களாகவும் இருப்பர். மனச்சாட்சிக்கு விரோதமாக இவர்கள் நடக்கமாட்டார்கள். துஷ்டர்களிடம் இவர்கள் எளிதில் பழகமாட்டார்கள். நல்ல குணமுள்ள உயர்ந்த மனிதர்களிடம் மட்டுமே இவர்கள் பழகுவார்கள். இனிமையாக, நேர்மையாக, கவர்ச்சிகரமாக பேசக் கூடிய ஆற்றலும் இவர்களிடம் உண்டு. நீதி, நேர்மை, பண்பு, ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்தவர்கள்.


தாய்ப்பாசம், தந்தை பாசமுடையவர்கள். தன்னலம் கருதாது பொது நலத்துக்காக பாடுபடக்கூடிய சுபாவமும் இவர்களிடம் உண்டு. சகோதர பாசம் சுமாராக இருக்கும். குழந்தை பாசம் அதிகமாக இருக்கும். குடும்ப பொறுப்புடையவர்கள்.

பணம் சம்பாதிப்பதில் இவர்கள் கெட்டிக்காரர்களாகத் திகழ்வார்கள். நல்ல தெய்வ பக்தியும் தர்ம சிந்தனையும் நிறைந் தவர்கள். மனைவி பாசம் இவர்களுக்குச் சுமாராகவே இருக்கும். இல்வாழ்வில் சிறு கருத்து வேறு பாடுகள் வந்து விலக இடமுண்டு. பெரும்பாலும் இவர்கள் ஒரு பெரிய தொழில் அதிபராகவோ அல்லது சினிமா டைரக்டராகவோ வரக்கூடும்.

சிலர் அரசியலில் ஈடுபட்டு பெரும் பணம் சம்பாதிக்க நேரிடும். எந்தத் தொழிலில் இருந்தாலும் அங்கு இவர்கள் ஒரு தலைவர் போல் செயற்பட நேரிடும். கஷியர், மனேஜர், சுப்பர் வைசர், ஆசிரியர் போன்ற பதவிகளில் சிலர் இருக்க நேரிடும்.

சுரம், தோள்பட்டைவலி, நரம்புத்தளர்ச்சி, பாத ரோகம் போன்ற நோய்கள் சிலருக்கு வரக்கூடும். இவர்களது எதிர்காலம் பெரும் பாலும் சிறப்பாக இருக்கும். நல்ல அழகான தோற்றமுடையவர்கள் எனலாம்.

# வாய்க்கால்களில் கழிவுகள் அகற்றப்படவில்லை; நுளம்புப் பெருக்கத்தால் பொதுமக்கள் பாதிப்பு!



(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியிலுள்ள வாய்க்கால்களில் கழிவுகள் அகற்றப்படாததால் நுளம்புகள் பெருகி வியாபாரிகள், பொதுமக்கள் நுளம்புத் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கரவெட்டி சுகாதார உத்தியோகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையும் வீதி அபி விருத்தி அதிகார சபையும் சேர்ந்து துப்புரவு செய்ய வேண்டும் என அவர்களுக்கு அறிவித்தும் இதுவரையில் துப்புரவு செய்யப்படவில்லை எனக் கூறினார். (இ-5-60)



புன்னாலைக்கட்டுவன் ஈவினை அ.த.க.பாடசலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் சோ.ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலாளர் சி.ஜெயகாந், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்பட்டன.

# இராசி பலன்

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மேடம்:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், பூர்வீகச்சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**கடகம்:** தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**இராசி பலன் – கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | சந் | ராகு |
| | | | |
| | | | |
| சனி, குரு, கேது | சுக் | சூரி, செவ் புத | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
அனுசம், கேட்டை

**15.11.2019**

ஐப்பசி 29, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

திருதியை முன்னிரவு 8.09 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 11.56 மணிவரை

சுபநேரம் 6.07-7.37 மணிவரை

இராகுகாலம் 10.37-12.07 மணிவரை

ஐந்தாம் ஐப்பசி வெள்ளி

வளவன்

**தனுசு:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், வெளியூர்ப் பயணத்தால் பணவரவுகள் கிடைக்கலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**துலாம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கன்னி:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

தேர்தல் காலங்களில் பொதுச் சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துவது தொடர்பாக அவதானமாக இருப்போம்



எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் தமது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பொதுச் சொத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துவது பொது க்களின் வரிப்பணத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும்.

தேர்தல் காலங்களில் பொது சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துவது தொடர்பாக நீங்கள் அறிவீர்களானால் தகுந்த சாட்சிகளுடன் எமக்கு அறிவியுங்கள்.
(சகல தகவல்களும் இரகசியமாக பேணப்படும்)



பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம்.

பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம்.
ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா
5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு 05
தொலைநகல்: 011 2501707 மின்னஞ்சல்: pppr@tisrilanka.org

உடனடி அழைப்புகளுக்கு
**076 322 3442 076 322 3662**

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

(C-8228)

தேர்தல் காலங்களில் பொது சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்:பூரம் செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:தனியார் தொழில், London<br>எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/10237 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம் 2செவ் 1 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/10263 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 13செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L,கட்ட மேற்பார்வையாளர்<br>எதிர்பார்ப்பு: தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10239 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 32செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Medical Science, Australia<br>எதிர்பார்ப்பு: Australiaவில் நிரந்தரதொழில் புரிய கூடிய தகுதியுடையவர்<br>தொ.இ: G/10264 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3சூரிசெவ் 12 இல்<br>தகைமை/தொழில்:B.Scபட்டதாரி, Civil Engineer, UK<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/10241 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 79செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L,காசாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/10277 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 29 ½<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:B.Sc, M.Sc, IT Engineer<br>எதிர்பார்ப்பு: சிங்கப்பூரில்தொழில் புரியக்கூடிய தகுதியுடையவர்<br>தொ.இ: B/10242 | பிறப்பு: 1995கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/10278 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


german cooperation giz VTA

## கட்டுமானத்துறையானது எமது பிராந்தியத்தில்



அதிக வேலை வாய்ப்பினை
ஈட்டித்தரும் ஓர் துறையாகும்.
அதில் நாமும் இணைவதன் மூலம்
வருமானத்தை அதிகரிப்பதோடு
மற்றவர்களிற்கும்
முன்மாதிரியாக திகழ்வோம்.

**பயிற்சியின்போது நாளொன்றிற்கு ரூபா 500 கொடுப்பனவாக வழங்கப்படும்.**
**120 நாட்கள் பயிற்சியின் பின்னர் NVQ-3 சான்றிதழ் வழங்கப்படும்.**

- கட்டட நிர்மாணவியலாளர்
- மரவேலை தொழில்நுட்பவியலாளர் (கட்டடம்)

(C-8227)

ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
**021 2227949 | 021 2211793 | 071 03188062 | 071 0318737**

## யாழிலிருந்து கொழும்பு பயணித்த இ.போ.ச.பேருந்து மீது கல்வீச்சு

### மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(பங்கதெனிய)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்து மீது கல்வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சிலாபம் - புத்தளம் வீதியின் பங்கதெனிய - லுனுஓயா பாலத்திற்கு அருகில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலில் மூவர் காயமடைந்த நிலையில், சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அத்தோடு, இந்தத் தாக்குதலில் பேருந்தின் கண்ணாடிகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன.

ஆட்டோவில் பயணித்த சிலர், குறித்த கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றதாக பேருந்து சாரதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

சிலாபம் ஊடாகப் பயணிக்கும் இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் மீது இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் கல்வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




ஸ்ரீ சிவகுருநாதர் சுவாமி கோவில்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகுருநாத சுவாமி கோவில் 23.11.2012 இல் பாலஸ்தானம் செய்யப்பட்டு 12.06.2013 இல் திருப்பணி வேலைகள் ஆரம்பித்து நிதி பொருள் வசதி இன்மை காரணத்தினால் வேலைகள் நிறைவேற்ற முடியாமல் விடப்பட்டு தற்போது திருப்பணி வேலைகள் மீண்டும் ஆரம்பிக்க ப்பட்டுள்ளன.

எனவே நல்லுள்ளம் கொண்ட ஸ்ரீ சிவகுருநாதர் சுவாமி பக்த அடியார்கள் திருப்பணி வேலைகள் பூர்த்தியடைய தங்களாலான உதவிகளை மேற்கொள்ளவும்.

தர்மகர்த்தா
ஸ்ரீ சிவகுருநாதர்
சுவாமி ஆலயம்.

பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(965)


# அனர்த்த முகாமைத்துவ தகவல்களைப் பரிமாற
# பாதுகாப்பு அமைச்சால் எஸ்.எம்.எஸ்.சேவை

(கொழும்பு)


தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அவசர நிலைமை குறித்து உடனுக்குடன் தகவல்களைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக குறுந்தகவல் (SMS) சேவையைப் பாதுகாப்பு அமைச்சு ஆரம்பித்தது.

பாதுகாப்பு அமைச்சால் பொது மக்களுக்காக முன்னெடுக்கப்படும் சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில், இந்தச் சேவையை நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சு அறிமுகப்படுத்தியது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் எஸ்.எச்.எஸ். கோட்டேகொடவின் தலைமையில் இதுதொடர்பான நிகழ்வு பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்தல் ஆணைக்குழு, டயலொக், மொபிடெல், எயார்டெல், ஹட்ச், லங்காபெல் ஆகிய தொலைத்தொடர்பு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த எஸ்.எம்.எஸ்.சேவை பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பிரிவு மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைமை அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறும். (இ-7)




## மோட்டார் சைக்கிள்கள் - கார் மோதி விபத்து இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில்



(வெல்லவாய)

வெல்லவாய-தணமல்வில பிரதான வீதியில் வெஹெரயாய பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு, கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் காயமடைந்த இரண்டு நபர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி மோட்டார் சைக்கிள் இரண்டிலும் பயணித்த இருவரே இவ்வாறு பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டு வெல்லவாய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மைத்திரி பொது மன்னிப்பு 284 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 284 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

ஜனாதிபதியின் அனுமதி கிடைத்தவுடன் அவர்களை விடுதலை செய்யவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜே.டபிள்யூ.தென்னகோன் தெரிவித்தார்.

65 வயதுக்கும் மேற்பட்ட சிறு குற்றங்களுக்காக சிறை வைக்கப்பட்டுள்ளவர்களே இவ்வாறு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



## புத்தர் சிலைகள் சேதம்; சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

(மாவனெல்ல)

மாவனெல்ல மற்றும் அதனைச் சுற்றியுள்ள சில பிரதேசங்களிலுள்ள புத்தர் சிலைகளைச் சேதப்படுத்தியதாக கைது செய்யப்பட்ட 16 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சந்தேக நபர்களை நேற்று மாவனெல்ல நீதவான் நீதிமன்ற நீதவான் உபுல் ராஜகருணா முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

## தேர்தல் கடமைகளுக்கு 1300 இ.போ.ச.பஸ்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக 1300 பஸ்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வாறு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லல் மற்றும் அதிகாரிகள், பொலிஸாரின் பிரயாண நடவடிக்கைகளுக்காகவே இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

குறித்த பஸ் சேவைகள் நான்கு நாட்களுக்கு இடம்பெறவுள்ளதுடன் ஒரு பஸ் இற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இருந்து நாளொன்றுக்கு 15,000 ரூபாவைப் போக்குவரத்து சபை பெற்றுக்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## புதையல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் வெடிபொருட்களுடன் கைதாகினர்

(ஹொரணை)

ஹொரணை பகுதியில் சட்ட விரோதமாக புதையல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் மூவர் வெடிபொருட்களுடன் கைது செய்யப்பட்டனர்.

ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தானை பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தொடங்கொட, அங்குருவாதொட்ட மற்றும் ஹொரணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 36 - 48 வயதுக்கு இடைப்பட்ட மூன்று பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து துளையிடும் இயந்திரம், 3 டெட்டனேட்டர்கள், 2 ஜெலட்னைட்கள், 30 கிராம் வெடி மருந்து, 300 கிராம் அமோனியா வகை வெடி மருந்து, அகழ்வுக்காகப் பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்களும் மீட்கப்பட்டன. சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# சிவ பக்தியின் சிறந்த திருமகன் மார்க்கண்டேயன்

மிருகண்டு என்பவர் பெருந்தவ முனிவர். அவருக்கும் அவரது பத்தினியார் மித்திராவதிக்கும் வாழ்க்கையில் பெருங்குறை இருந்து வந்தது. அது அவர்களுக்குப் புத்திரப் பேறு இல்லாமையே ஆகும். இவர்கள் இருவரும் காசிக்குச் சென்று மணிகர்ணிகையில் நீராடி, விஸ்வநாதரை நினைத்து ஓராண்டு காலம் கடும் தவமியற்றினர்.

## தவப்பயன்

அந்தத் தவத்தில் மகிழ்ந்த சர்வேஸ்வரன் அவர்கள் முன்தோன்றி உங்களுக்கு யாது வரம் வேண்டும்? என வினவ முனிவர் புத்திரப் பேறு வேண்டும் என்று வேண்டினார்.

முனிவருக்குப் புத்திரப் பேறு குறித்த வரத்தை அளிக்கும் முன்பு சிவன் நூறு வயது வரை வாழும் பிள்ளை வேண்டுமா? அல்லது பதினாறு வயதே வாழக்கூடிய புத்திரன் வேண்டுமா? இதில் நூறு வயது வரை வாழும் பிள்ளைக்கு ஊமை, செவிடு, முடம், வியாதி, சகல தீய குணங்களும் இருக்கும். பதினாறு வயது வரை வாழும் புதல்வனோ மகா அழகனாய் இருப்பான். சகல கலைகளிலும் வல்லவனாய் இருப்பான். என்மீது மட்டற்ற பக்தி பூண்டு வாழ்வான். இவர்களில் எந்த மாதிரியான புத்திரன் உனக்கு வேண்டும்? என்றார்.

முனிவர் எந்தப் புத்திரனை வேண்டுவார். நூறுவயது வரை செவிடாகவும், குருடாகவும் வியாதியஸ்தனாகவும் இருக்கும் பிள்ளையை எவர்தான் வேண்டுவார்? குறைந்த வயது வாழும் புத்திரனையே தேர்வு செய்து வேண்டினார் அவர்.

தந்தேன் என்று புத்திரப் பேற்றை நல்கி விட்டு மறைந்தார் விஸ்வநாதர்.

## புத்திரப்பேறு மார்க்கண்டேயன் அவதாரம்

காசியில் தவம் முடிந்ததும் பத்து மாதத்தில் முனிவரின் புத்தினி அழகான ஆண் குழந்தை ஒன்றை பெற்றார். இளஞ்சூரியனைப் போல் ஒளி வீசினான் அவன். பிரம தேவரே வந்து குழந்தைக்கு மார்க்கண்டேயன் என்று பெயர் சூட்டினார். குழந்தை மகா புத்திமானாக இருந்தான். ஐந்து வயது ஆவதற்குள்ளாகவே சகல கலைகளையும் கற்று வளர்ந்து விட்டான். அத்தோடு அறிவு, அடக்கம், பெரியவர்களை மதித்தல், அளவிடா சிவபத்தி ஆகியவையோடு கண்டார். வியக்கும் வண்ணம் வாந்தான்.

## சிவபக்தியில் சிறந்த திருத்தொண்டன்

அவனுக்குப் பதினைந்து வயது முடிந்து பதினாறு வயதானது. இதுவரை தன் மகனைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்திருந்த மிருகண்டு முனிவரும், அவரது பத்தினியார் மித்திராவதியும் கவலையடைந்தனர். இன்னும் ஓராண்டு தானே நமது அருமை மகன் உயிரோடு இருப்பான் என்பதை உணர்ந்தவர்களாக இருவரும் துன்பக் கடலில் மூழ்கினர்.

பெற்றோர் அடைந்துள்ள இந்தத்துன்ப நிலைக்கு என்ன காரணம் என்று புரியாமல் தத்தளித்த மார்க்கண்டேயன் அதற்கான காரணம் என்ன என்று பெற்றோரை வினவினான். அவர்களும் வேறு வழியின்றி சிவபெருமான் அளித்த வரத்தின் விளைவாக அவன் இன்னும் ஓராண்டே வாழ முடியும் என்பதைக் கூறி வருந்தினர். இதைக் கேட்ட மார்க்கண்டேயன் தந்தையே நீங்கள் இதற்காகத் துளியும் வருந்த வேண்டாம். நமசிவாய மந்திரமும் திருநீறும் எமக்குத் துணையிருக்கும். எம்மைக் காக்கும் சிவபரம் பொருள் ஒருபோதும் எம்மைக் கைவிடார். எனவே துணிவோடு இருங்கள்! என்று கூறி விடைபெற்று காசிக்குச் சென்று மணிகர்ணிகையில் நீராடினான். அங்கு சிவலிங்கம் ஒன்றை நிறுவி அதற்கு நறுமலர் சாத்தி வணங்கி தவம் செய்யலானான்.

## சிவபரம் பொருளின் அனுக்கிரகம்

சிவபெருமானும் அவனது தவத்தில் இன்புற்று அவன் முன்பாகத் தோன்றினார். உனக்கு யாது வரம் வேண்டும்? என்று வினவ மார்க்கண்டேயன் அவர் காலடியில் விழுந்து வணங்கி அவரைப் பலவாறு போற்றித் துதித்துத் தன்னைக் காலன் கைபடா வண்ணம் காத்தருள வேண்டுகிறேன் என்றான். அவரும் மார்க்கண்டேயா! நீ அஞ்ச வேண்டாம். அந்தகனின் பிடியிலிருந்து நம் அருள் உன்னைக் காப்பாற்றும்! என்று வரமருளி மறைந்தார். மார்க்கண்டேயர் தன் வாழ்நாளைப் பற்றிக் கவலைப்படாமல் சதா சிவபூஜையில் திளைத்திருந்தார். பதினாறு ஆண்டுகள் நிறைவடைந்தன.



## யமதர்மராஜன் மேற்கொண்ட சபதம்

யமதூதன் சிவபூஜையிலிருந்த மார்க்கண்டேயனை அனுக அஞ்சி மேல் உலகு சென்று யமதர்ம ராஜனிடம் விடயத்தைக் கூறுகிறான்.

யமன் தன் கணக்கரான சித்திரகுப்தனை விளித்து மார்க்கண்டேயனது கணக்கைக் கூறுமாறு கேட்கிறான்.

சித்திரகுப்பதனோ பிரபு! மார்க்கண்டேயனுக்கு ஈசன் தந்த பதினாறு ஆண்டு காலம் முடிந்தது. விதியை வென்றவர் எவருமிலர். மார்க்கண்டேயரின் சிவ பூஜையின் பலனாய் அவருடைய புண்ணியம் மிக அதிகரித்து விட்டது. அதனால் அவர் எமது உலகிற்கு வர நியாயமில்லை. நேராகக் கைலாயம் செல்வதற்கு தயாராய் இருக்கிறார் என்றார்.

## காலன் மேற்கொண்ட முயற்சி!

சித்திரகுப்தன் கூறிய விடயங்களைக் கேள்வியுற்ற யமதர்ம ராஜன் தனது அமைச்சனான காலனை அழைத்து மார்க்கண்டேயனைப் பிடித்து வரும்படி ஆணையிடுகிறான்.

காலன் மார்க்கண்டேயனிடம் சென்று மிகவும் நயமாகப் பேசித் தன்னுடன் வந்து விடுமாறு அழைக்கிறான். தன்னுடன் வந்தால் யமன் இந்திரப் பதவி வாங்கித் தருவார் என்றும் ஆசை காட்டுகிறான்.

## மார்க் கண்டேயன் கொண்டபக்தி

ஆனால் மார்க்கண்டேயன் எதையும் பொருட்படுத்தாது சிவபூஜையில் திளைத்திருந்தான். போம் அய்யா சிவனடிக்கு அன்பு செய்தோர் இந்திரப் பதவி என்ன வேறு எந்தப் பதவியையும் விரும்பார். போய் உம் எஜமானிடம் சொல்லும் என்று கூறி விடுகிறான்.

## சிவனடியார்க்கு அருளிய பரம்பொருள்

இதையறிந்த யமதர்மராஜனுக்குக் கடுங்கோபம் வந்தது. தன் வாகனமேறிப் பாசக் கயிற்றைச் சுழற்றிய படி மார்க்கண்டேயன் இருப்பிடம் வந்த டைந்தார்.

மார்க்கண்டேயா என்ன நினைத் துக் கொண்டிருக்கிறாய் நீ? ஈசனார் உனக்கு உவந்தளித்தது பதினாறு வயது தான் என்பதை மறந்தாயா? நீ புரியும் சிவ பூஜை உன் பாவத்தை நீக்குமேயன்றி நான் வீசும் பாசக்கயிற்றைத்தடுக்காது.

பிறப்பு, இறப்பு என்ற துன்பம் கமலக் கண்ணனுக்குமுண்டு. எனக்குமுண்டு. பிறப்பு, இறப்பு அற்றவர் பரஞ்சுடர் ஒருவரே. தேவர் மூவர் மற்றும் எவர் உன்னைக் காப்பாற்ற முயன்றாலும் உன் உயிரைக் கொண்டு போகாமல் நான் யமலோகம் திரும்ப மாட்டேன்! என்று கூறினார்.

ஆனால் எந்தவித சலனமும் இன்றி யமதர்மராஜன் கூறிய விடயங்களை அமைதியாகக் கேட்டிருந்த மார்க்கண்டேயனோ யமதர்மராஜனே! சிவனடியார் பெருமை குறித்து நீ உணரவில்லை. என்னுடைய உயிர் பிரிந்தாலும் நான் சிவ பதமடைவேனே தவிர, உன்னுடன் வர மாட்டேன் என்று கூறி ஆலயத்தினுள் சென்று சிவலிங்கத்தைத் தழுவி நின்றான். யமதர்மராஜனும் உள்ளே சென்று மார்க்கண்டேயனை அவன் அணைத்திருந்த சிவலிங்கத் தோடு சேர்த்து தன் பாசக் கயிற்றை வீசி இழுத்தான்.

அந்த சந்தர்ப்பத்திலே சிவபரம் பொருள் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு மார்க்கண்டேயா நீ அஞ்சாதே! என்றுகூறி தன் இடது பாதத்தை தூக்கி யமதர்மராஜனை உதைத்தார். அக்கணமே அவன் தன் பரிவாரங்களுடன் உயிர் துறந்தான்.

சிவபெருமான் மார்க்கண்டேயனுக்கு அந்தமிலா ஆயுளை வழங்கி மறைந்தார். மார்க்கண்டேயர் மகிழ்வுடன் இல்லம் ஏகி தன் பெற்றோரிடம் நடந்த விடயங்களைக்கூற அவர்கள் சிவபெருமானின் கருணையை எண்ணி எண்ணிக் கண்ணீர் மல்கினார்.

## இறை மகத்துவத்தைப் போற்றித் துதிப்போம்

இது இப்படி இருக்க யமதர்மராஜன் உயிரிழந்ததால் பூமியில் எவருக்கும் மரணமேயில்லாமல் போய் விட்டது! மக்கள் பெருக்கம் அதிகமாகிப் பூமி அந்தப்பாரத்தால் நிலை தடுமாறியது.

இதை அவதானித்த தேவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபரம்பொருளும் உலக இயங்கு நிலையை சீர் செய்யும் விதமாக யமதர்மராஜனை உயிர்ப்பித்தார். அவன் தொழிலைத் தொடருமாறு பணித்தார்.

இத்தகு மார்க்கண்டேயர் வரலாறு சிவன் கோவில்களில் இயம சங்காரத் திருவிழாவாக ஐப்பசி கடைசி வெள்ளிக்கிழமையில் நடைபெறுகிறது.

**செந்நாப்புலவர் மதுரகவி.காரை எம்.பி.அருளானந்தன்.**

# தேர்தல் முறைப்பாடுகள் 49 ஆக அதிகரிப்பு!

(ஏறாவூர்)

மட்டக்களப்பு தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவிற்கு இதுவரை 49 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மா.உதயகுமார் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தார்.

அதேவேளை கிடைக்கப் பெற்ற தேர்தல் கால முறைகேடு சம்பந்தமான 49 முறைப்பாடுகளில் 35 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடி, வாழைச்சேனை, பட்டிப்பளை, வெல்லாவெளி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதுவரை மட்டக்களப்பில் பெரியளவான வன்முறைச் சம்பவங்கள் பதிவாகவில்லை என்று தெரிவித்த அவர் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் அனுமதி பெறப்படாமல் நடத்தப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டம், ஊடகங்களில் பக்கச்சார்பான செய்திகளையும் பிரசாரங்களையும் முன்னெடுத்தமை, முகநூல் மூலமாக அரசாங்க உத்தியோகத்தர்கள் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டமை, அனுமதியின்றி பதாகைகள் கட்டியமை, அமைத்தமை தொடர்பான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் சில அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டமை, சட்ட விதிகளுக்கு மாறாக வாகனங்கள், சொத்துக்கள் வழங்கல், பொருட்கள் விநியோகம் போன்ற முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. (இ-7)

# வவுனியாவில் 140 பேருக்கு டெங்கு

## பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு

# சுகாதாரத்துறை எச்சரிக்கை

(நெளுக்குளம்)

**வவுனியா மாவட்டத்தில் கடந்த செப்டெம்பர் மாதத்திலிருந்து நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் 140பேர் டெங்கு நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

இதில் பாடசாலை மாணவர்கள் 6 பேரும் ஒரு ஆசிரியரும் அடங்குவதாகவும் பாடசாலை ஒன்றிலிருந்து டெங்கு நுளம்பு உருவாகும் குடம்பிகள் பூச்சியியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா சுகாதாரத்திணைக்களம்தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த் செப்டெம்பர் மாதம் முற்பகுதியிலிருந்து நவம்பர் 13ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 140பேருக்கு டெங்கு நோய் தொற்று ஏற்பட்டு வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் மட்டும் 18பேருக்கு டெங்கு தொற்று ஏற்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரம், இறம்பைக்குளம், சூசைப்பிள்ளையார் குளம், ராணி மில் வீதி, வைரவபுளியங்குளம் போன்ற பகுதிகளில் எதிர் வரும் திங்கட்கிழமை முதல் டெங்கு நுளம்பு பெரும் இடங்கள் அவதானிக்கப்பட்டு அதற்கு எதிரான நடவடிக்கைகள் பொது சுகாதாரப்பரிசோதகர்களினால் களப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளன.

நுளம்பு பெருகும் இடங்கள் அவதானிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக கருதி தமது இருப்பிடங்களை துப்புரவு செய்து நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்வதாக வவுனியா சுகாதாரத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (9-250-299)

# கஞ்சாவுடன் இளைஞன் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இயக்கச்சி பகுதியில் 1950 கிலோகிராம் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார் . யாழ்.வடமராட்சி கிழக்கு கோவில் பகுதியில் இருந்து வெளிமாவட்டத்திற்கு கஞ்சாவினை கொண்டு செல்ல முற்பட்ட போதே குறித்த இளைஞன் விசேட அதிரடி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் கட்டைக்காடு கேவில் பகுதியை சேர்ந்த 20 வயது இளைஞன் என விசேட அதிரடிப் படையினர் தெரிவித்ததுடன் கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் இளைஞனை பளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணையை பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-315)

# ஜனாதிபதி தேர்தல் முறைகேடு வவுனியாவில் 45 முறைப்பாடுகள்

(நெளுக்குளம்)

ஜனாதிபதித் தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் வவுனியா மாவட்டத்தில் 45 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஐ.எம். ஹனீபா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முறைகேடுகளாக இதுவரை 45 முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப் பெற்றன.

அவை தேர்தலில் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தாத சிறிய முறைப்பாடுகள். இருப்பினும் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சுமுகமாக தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-299)




# உலக நீரிழிவு தினம்






(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் உலக நீரிழிவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியில் நவம்பர் 14 ஆம் திகதி சர்வதேச நீரிழிவு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்த வகையில் "நீரிழிவு நோயை வெல்லவும் நீரிழிவு நோயுடன் வாழ்வை மகிழ்ச்சிகரமாக முன்னெடுக்கவும்" எனும் தொனிப்பொருளில் நீரிழிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதிகளின் பிரிவின் ஒழுங்கமைப்பில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் கண் தொடர்பான ஆலோசனை மண்டபத்தில் நேற்று நீரிழிவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நீரிழிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதிகளின் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் மகேசி அமரவர்த்தன தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம். ஹனீபா பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்ததுடன், வைத்தியசாலையின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது நீரிழிவு நோய் தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டதுடன் நீரிழிவு நோயினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது. (9-250)

# 28 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 28 லீற்றர் கசிப்புடன் இருவர் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் குமாரசுவாமிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சந்தேகத்துக்கிடமான முறையில் இருவர் வீதியில் பயணித்துள்ளனர். அவர்களை பொலிஸார் சோதனை செய்த போது அவர்களிடம் இருந்து 28 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் இருவரையும் கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (9-316)



**கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலய பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் கலந்து கொண்டார். (படம்:அக்கராயன் செய்தியாளர்)**

# புத்தளத்தில் வசிக்கும் மன்னார் வாக்காளர்களை அழைத்துவர 120 தனியார் பேருந்துகளுக்கு அனுமதி

(மன்னார்)

புத்தளம் பகுதியில் வாழும் மன்னார் மாவட்ட வாக்காளர்கள் மன்னாருக்கு வருகை தந்து வாக்களிப்பதற்கு 120 தனி யார் போக்கு வரத்து பேருந்துகளுக்கு தேர்தல் ஆணைக் குழு அனுமதி வழங்கியுள்ளதாக மன்னார் உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் பலர் புத்தளம் பகுதியில் இடம்பெயர்ந்த நிலையில் மன்னார் மாவட்ட தேர்தல் தொகுதியில் வாக்காளராக பதிவு செய்யப்பட்டு புத்தளம் பகுதியில் வசிப்பிடமாக கொண்டவர்கள் கடந்த காலங்களைப்போன்று இம்முறை இங்கு வாக்களிக்க வருவதற்கு தனியார் பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அவ்வாறு புத்தளத்திலிருந்து தனியார் பேருந்து மூலம் மன்னாருக்கு வந்து வாக்களிக்க வர வேண்டும் என விரும்பினால் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அனுமதி பெற்று வந்தாலே மட்டும் அனுமதிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்களை அழைத்து வரும் பேருந்துகள் வாக்குச்சாவடிகளிலிருந்து 500 மீற்றர் தூரத்திலே நிறுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (9-285)

# ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி




(வவுனியா)

நாளை இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு வடக்கிலுள்ள மாவட்டச் செயலகங்களில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அந்தந்த மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் உள்ள மாவட்ட செயலகங்களில் வாக்கு என்னும் பிரிவு, வாகனப்பிரிவு, மின்சார சபை பிரிவு, பொலிஸ் நிலைய பிரிவு, ஒழுங்கமைப்பு பிரிவு, வழங்கல் பிரிவு, தொடர்பாடல் பிரிவு, பெறுபேற்றினை அறிவிக்கும் பிரிவு, ஊடகப்பிரிவு என தனித்தனியாக பிரிக்கப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு மாவட்ட செயலக வளாகங்களில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இன்று அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் பெட்டிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-281,250,350)

# முல்லைத்தீவின் அபிவிருத்திக்கு வனவளத் திணைக்களமே தடை

## சிவமோகன் எம்.பி. குற்றச்சாட்டு

(அக்கராயன்)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு வனவளத் திணைக்களமே தடையாக உள்ளது என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 2010 ஆம் ஆண்டின் பின்னர் நந்திக் கடலினைத் துப்புரவு செய்வதற்கு பல முயற்சிகள், கூட்டங்கள் இடம் பெற்றன.

வனவளத் திணைக்களம் நந்திக்கடலின் பகுதிகளில் தமது எல்லைகளாக அறிவித்து இருப்பதன் காரணமாக துப்புரவுப் பணிகளை முன்னெடுக்க முடியாது உள்ளது.

அதுமட்டுமன்றி மாவட்டத்தின் மக்களின் குடியிருப்புகள் மற்றும் காணிகள் எல்லாம் வனவளத் திணைக்களம் எல்லைகளை நாட்டியிருப்பதன் காரணமாக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியவில்லை. மாவட்டத்திற்கு வருகின்ற நிதிகளும் திரும்பிச் செல்கின்றன.

மாவட்டத்தின் அபிவிருத்திக்கு வனவளத் திணைக்களமே தடையாக உள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களையும் வனவளத் திணைக்களம் மதிப்பதுமில்லை செயற்படுத்துவதுமில்லை என மேலும் தெரிவித்தார். (9-350)

# ஒருமாதமாக சீரமைக்கப்படாத அக்கராயன் குடிநீர்த்திட்டம்

## பொதுமக்கள் அவதி

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் குடிநீர்த் திட்டம் செயலிழந்து ஒரு மாதம் கடந்த நிலையிலும் அதிகாரிகள் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என அக்கராயன் பொது அமைப்புகள் விசனம் வெளியிட்டுள்ளன. நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் குடிநீர்த் திட்டத்தின் கிணறு அக்கராயன் இடதுகரை வாய்க்காலுக்கு அருகில் அமைந்துள்ளது. இக்கிணற்றின் நீரூற்றுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என வேலைகள் தொடங்கப்பட்ட நிலையில் மழை பெய்து வெளி வெள்ளம் கிணற்றுக்குள் கலந்ததன் காரணமாக கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக அக்கராயன் குடிநீர்த் திட்டம் செயலிழந்து காணப்படுகின்றது. குடிநீரினைப் பெற்று வந்த 260 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்போது குடிநீரினைப் பெற்றுக் கொள்ள முடியாது தவித்து வருகின்றன.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகள் ஆகியோருக்கு அவசரமாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் கிணற்றினைச் சுத்தப்படுத்தி வேலைகளை நிறைவு செய்து குடிநீரினை வினியோகிப்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்கவில்லை எனவும் அதிகாரிகள் காட்டும் அசமந்தப்போக்கு காரணமாக குடிநீரினைப் பெற்று வந்த குடும்பங்கள் நீண்ட தூரங்களுக்குச் சென்று குடிநீரினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவலம் காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இவ்விடயம் தொடர்பாக அவசர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அக்கராயன் பொது அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (9-350)




## பகிரங்க அறிவித்தல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் வழக்கு இல-B/1439/19 சான்றுப்பொருள்-பொலிறோ கெப் வாகனம் வாகன இலக்கம் NC PQ-3677, வழக்கு இல-B/1440/19 சான்றுபொருள்-பொலிறோ கெப் வாகனம் வாகன இலக்கம்-NP PP-9595 மறுதவணை-05.12.2019. சான்றுப்பொருட்களின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து 02 மாதங்களின் பின் எதுவிதமான முன் அறிவித்தல்கள் வழங்கப்படாது சான்றுப் பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் எனவும் பதிவாளரால் அறிவிக்கப்பட்டது. (9)

# செட்டிகுளம் பிரதேச சபை அமர்வில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வெளிநடப்பு

(நெளுக்குளம்)



வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சபை நடவடிக்கையில் இருந்து நேற்று வெளியேறியிருந்தனர்.

செட்டிகுளம் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றுக்காலை தவிசாளர் ஆ.அந்தோணி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் சுப்பையா ஜெகதீஸ்வரன் தனது வட்டாரத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்க முற்பட்டபோது தவிசாளர் அதனை தடுத்து நிறுத்தியிருந்தார். இதனால் அவர் சபையிலிருந்து வெளியேறியிருந்தார்.

அவரைத் தொடர்ந்து ஏனைய கூட்டமைப்பின் நான்கு உறுப்பினர்களும் வெளியேறியிருந்ததுடன், சபை நடவடிக்கையை முற்றாகப் புறக்கணித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தமிழ்க்கூட்டமைப்பின் உறுப்பினர்கள், தனது வட்டாரத்தில் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக சிரேஷ்ட உறுப்பினர் ஜெகதீஸ்வரன் சபையில் கருத்து தெரிவிக்க முற்பட்டபோது சபையின் தவிசாளர் அதனை தடுத்திருந்தார். தனது கருத்தினை தெரிவிப்பதற்கு மீண்டும் அவர் சந்தர்ப்பத்தினை கோரியபோதும் அது வழங்கப்படாத நிலையில் அவர் சபையிலிருந்து வெளியேறினார்.

இதற்கு முன்பு இடம்பெற்ற கூட்டங்களில் இவ்வாறான கட்டுப்பாடுகளோ, நடைமுறையோ இருக்கவில்லை. இன்று அந்த அனுமதி வழங்காமைக்கான காரணத்தை சக உறுப்பினர்கள் கேட்டபோது. அதனை இந்த நேரத்தில் கூற முடியாது.

மேலதிக நேரத்தில் கேட்குமாறு கூறி எம்மையும் தடுத்ததால் சபையின் போக்கு தவறான நிலையில் காணப்படுவதுடன், நீங்கள் எங்களைப் பழிவாங்கும் நோக்குடன் செயற்படுகின்றீர்கள் என தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்தோம்.

எமது நோக்கம் வெளிநடப்பு செய்து சபையை குழப்புவதல்ல. எமது கருத்துக்களிற்கு மதிப்பளிக்க வேண்டும். எம்மை ஓரங்கட்டி தங்களுக்கு சாதகமாக சபையை நடத்த முனைந்தால் எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது.

இதனால் எமக்கும் அவப்பெயர் ஏற்படுவதுடன் சபை சரியாக இயங்குகின் றதா? என்ற கேள்வியும் மக்களிடத்தில் ஏற்படுகின்றது என மேலும் தெரிவித்தனர். (9-299)

## ஸ்கந்தபுரம் பகுதியில் உள்ளக வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை


(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவின் உள்ளக வீதிகளைப் புனரமைக்குமாறு இக்கிராம பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. கடந்த பத்தாண்டுகளாக குறித்த வீதிகள் புனரமைக்கப்படாததன் காரணமாக வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாக ஸ்கந்தபுரம் இல.01, இல 02 பாடசாலைகள் மற்றும் அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு மாணவர்கள் சென்று வருவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவர்கள் மழை காலங்களில் கைகளில் பாதணிகளை ஏந்தி வெள்ளங்களை கடக்க வேண்டிய நிலைமை தொடர்கின்றது. உள்ளக வீதிகள் புனரமைக்கப்படாததன் காரணமாக தமது விவசாய உற்பத்திப் பொருட்களை வீடுகளுக்கு எடுத்து வருவதற்கும் சந்தைப் படுத்துவதிலும் நெருக்கடிகளை விவசாயிகள் எதிர்கொள்கின்றனர்.

வீதிகளில் பெருமளவு குழிகளில்மழை வெள்ளம்தேங்கி நின்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை காணப்படுகின்றது என சுட்டிக்காட்டியுள்ளனர். (9-350)

# பரிசளிப்பு விழா



(அக்கராயன்)

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 89 ஆவது வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வாரம் பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

பாடசாலை முதல்வர் தலைமையில் இடம் பெற்ற இப் பரிசளிப்பு விழாவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் சான்றிதழ் மற்றும் பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (9-350)

# தொழிற்பயிற்சிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(முல்லைத்தீவு)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் NVQ மட்டத்திலான முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் நடைபெறுகிறது. பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக் கற்கை நெறிகளாவன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், இரு சக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், தையலாளர், வெதுப்புநர், அழகுக்கலையும் சிகை அலங்காரமும், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டர் வாகனம் திருத்துநர் மற்றும் கணனி வரைகலை வடிவமைப்பாளர் ஆகும்.

இக் கற்கைநெறிகள் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், பாலிநகர் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறுகின்றன.

இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், நீதிமன்ற வீதி, மாங்குளம் பிரதான வீதி, முல்லைத்தீவு அல்லது பாலிநகர் தொழிற்பயிற்சி நிலையம், மாந்தை கிழக்கு, முல்லைத்தீவு அல்லது ஒட்டுசுட்டான் தொழிற்பயிற்சி நிலையம், 14 ஆம் கட்டை, மாங்குளம் வீதி, முல்லைத்தீவு எனும் முகவரிகளில் 2020.01.10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் மேலதிக தொடர்புகளுக்கு முல்லைத்தீவு-021 229 0097, 071 031 8989, ஒட்டு சுட்டான்-071 031 8991, பாலிநகர்-071 031 8990 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## துவிச்சக்கரவண்டி வழங்கி வைப்பு




(நெளுக்குளம்)

செக்கட்டிபுலவு அ.த.க பாடசாலையில் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற ஒரே ஒரு மாணவியான செல்வி சசிக்குமார் சாருகாவிற்கு அதிபரின் வேண்டுகோளுக்கமைவாக வன் னியசிங்கம்-கனி தம்பதிகளால் துவிச்சக்கரவண்டி ஒன்று தமிழ் விருட்சமூடாக கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. (9-299)




# “நாடு முழுவதும் மதுவிலக்கு வேண்டும்”
## பாடசாலை மாணவன் பிரதமருக்கு கடிதம்




(சென்னை)
நாடு முழுவதும் மதுவிலக்கு அமுல்படுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு பாடசாலை மாணவன் ஒருவன் கடிதம் எழுதியுள்ளான்.

மதுவிலக்கு குறித்து போராடி வரும் பாடசாலை மாணவன் ஆகாஷ் ஆனந்தன் (வயது-10), சென்னையில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

கடந்த 3 ஆண்டு காலமாக மதுவுக்கு எதிரான பிரசாரம் மேற்கொண்டு வருகிறேன். இந்த 3 ஆண்டு கால பிரசாரத்தில் அனைத்து மாநிலங்களிலும் மதுவிலக்கு கொண்டுவரப்பட்டு தேசிய அளவில் அமுல்படுத்தப்பட்டால் மட்டுமே, முழுமையான மது இல்லாத நாடு சாத்தியம் என்பதை உணர்ந்தேன். எனவே நாடு முழுவதும் மதுவிலக்கு அமல்படுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதி இருக்கிறேன்.

அத்துடன் மத்திய-மாநில பாடத்திட்டத்தில் குறிப்பாக 8 மற்றும் 9 ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் மது மற்றும் போதைப்பொருட்களின் அபாயங்கள் குறித்து விரிவான பாடமும் இடம்பெற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளேன் எனத் தெரிவித்தார். (ஐ)

# இளம் கண்டுபிடிப்பாளருக்கான பரிசு
## இந்திய இளம் விஞ்ஞானிக்கு வழங்கல்



(ரியோ டி ஜெனிரோ)
பிரேசில் நாட்டில் நடந்த போட்டியில் இந்திய இளம் விஞ்ஞானிக்கு ரூ.18 இலட்சம் பரிசு கிடைத்துள்ளது.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து 'பிரிக்ஸ்' அமைப்பை உருவாக்கியுள்ளன. இந்த அமைப்பின் இளம் விஞ்ஞானிகள் மன்ற மாநாடு கடந்த 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை பிரேசிலில் நடந்தது. இதில் மேற்படி 5 நாடுகளைச் சேர்ந்த இளம் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு தங்கள் கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தினர்.


இதில் இந்தியா சார்பில் 21 பேர் கொண்ட குழு பங்கேற்றது. அதில் பீகாரை சேர்ந்த ரவி பிரகாஷ் என்பவரும் இடம்பெற்றார். பெங்களூரில் உள்ள தேசிய பால் பண்ணை ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், மலிவு விலையிலான பால் குளிரூட்டும் அலகு ஒன்றை கண்டுபிடித்து இருந்தார்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இவரது படைப்பின் செயற்பாட்டை அங்கு விளக்கி காட்டப்பட்டது. இந்த போட்டியில் ரவி பிரகாசின் கண்டுபிடிப்பிற்கு தற்போது பிரிக்ஸ் இளம் கண்டுபிடிப்பாளருக்கான முதல் பரிசு கிடைத்துள்ளது. இந்தப் பரிசு 25 ஆயிரம் டொலர் (சுமார் ரூ.18 இலட்சம்) கொண்டதாகும்.

ரவி பிரகாஷ் உருவாக்கியுள்ள இந்த பால் குளிரூட்டும் அலகானது, வெறும் 30 நிமிடங்களிலேயே பாலை 37 டிகிரி செல்சியஸில் இருந்து 7 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலைக்கு மாற்றக்கூடிய திறன் வாய்ந்தது. இதற்காக நானோ-திரவ அடிப்படையிலான கட்டமைப்பு பொருட்கள் இதில் பயன்படுத்தப்படுகிறது. இந்த அலகு மலிவு விலையில் வாங்கக்கூடியது என்பதால், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தகவலை வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரவீஷ்குமார் தனது டுவிட்டர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ராஜஸ்தானில் வாகன விபத்து;
## எழுவர் பலி, பன்னிருவர் படுகாயம்



(ராஜஸ்தான்)
ராஜஸ்தானில் இடம்பெற்ற வாகன விபத்தில் எழுவர் உயிரிழந்துள்ளதுடன், 12 பேர் படுகாயமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

குறித்த விபத்து நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு இடம்பெற்றது.

ராஜஸ்தானின் மாநிலம் சிகார் மாவட்டத்திலுள்ள கதுஷ்யாம்ஜி என்ற இடத்தின் அருகே பேருந்துடன் வான் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் ஏழுபேர் உயிரிழந்துள்ளதுடன், 12 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2)

# இஸ்ரேல்-காஸா எல்
## 28 பேர் உயிரிழப்பு,



(ஜெருசலேம்)
இஸ்ரேல் - காஸா எல்லையில் இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக இதுவரை 26 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

தாக்குதல்களில் காயமடைந்த 63 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் காஸா - ஹமாஸ் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காஸா பிராந்தியத்திலுள்ள பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் ஆயுதக் குழுவின் மிகமுக்கிய தலைவரான பஹா அபு அல் அட்டா இஸ்ரேலிய வான்தாக்

# ஹொங்கொங்கில் தீவிரமடை
## பண்டைக்கால ஆயுதங்களை

### புகையிரதம் தீப்பற்றல்





(ஹொங்கொங்)
அம்புகளும் வில்லுகளும் பண்டைய புரான கால மோதல்களின் போது பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் ஆகும்.

ஹொங்கொங் நகரில் நேற்று முன்தினம் புதன்கிழமை சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மாணவர் குழுவினர் அந்தப் பண்டைக்கால ஆயுதங்களைப் பயன்படுத்திப் புதுவிதத் தாக்குதலொன்றை

# கோவையில் ரயில் மோதி

(கோவை)
கோவை இருகூர் அருகே ராவுத்தர் பாலம் பகுதியில் ரயில் மோதி 4 இளைஞர்கள் உயிரிழந்தனர். கோவையில் இருகூர் அருகே ராவுத்தர் பாலம் அமைந்துள்ளது. இந்நிலையில் நேற்று அதிகாலை ரயில்வே பாலத்தில் சில உடல்கள் சிதறிக் கிடப்பதாக பொலிஸாருக்கு

# வெளிநாடு

## ல்லையில் தாக்குதல்

## , 63 பேர் படுகாயம்




குதலில் உயிரிழந்ததைத் தொடர்ந்து எல்லைப் பகுதியில் மீண்டும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அல் அட்டா வெடிகுண்டு போன்றவரெனவும் உடனடியாக பயங்கரவாதத் தாக்குதல்களை அவரே திட்டமிடுபவரெனவும் இஸ்ரேல் தெரிவித்தது.

எவ்வாறாயினும், இதற்குத் தக்க பதிலடி வழங்கப்படுமென பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## டையும் போராட்டம்

## ளைப் பயன்படுத்தி தாக்குதல்





நடத்தினர்.

அவர்கள் தீப்பந்தமாக கொழுந்துவிட்டு எரியச்செய்யப்பட்ட அம்புகளை வில்லுகள் மூலம் ஏவி அந்நகரிலிருந்த சீனப் பல்கலைக்கழகமொன்றின் மீது தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் அருகிலிருந்த புகையிரதமொன்று தீப்பற்றி எரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தி 4 இளைஞர்கள் பலி

தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்தனர்.

தொடர்ந்து நடந்த விசாரணையில் ரயில் மோதி 4 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் 4 பேர்களும் கல்லூரி மாணவர்களாக இருக்கக்கூடும் என சந்தேகம் எழுந்துள்ளது. (2)

## இஸ்ரேலின் வான் தாக்குதலில் சிக்கி 10 பாலஸ்தீனர்கள் பலி; 45 பேர் படுகாயம்

(ஜெருசலேம்)

காஸா முனைப்பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் பாலஸ்தீனியர்கள் 10 பேர் உயிரிழந்தனர்.

பாலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேல் படையினருக்கும் இடையே நீண்ட காலமாகவே மோதல்கள் நடந்து வருகின்றன.



காஸாமுனை பகுதியில் இருந்து இஸ்ரேல் நாட்டின்மீது பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் போராளிகள் அவ்வப்போது ராக்கெட் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.



இதற்குப் பதிலடியாக காஸா நகரின் மீது இஸ்ரேல் நாட்டு போர் விமானங்களும் குண்டுகள் வீசுவது வழக்கம்.

ஹமாஸ் போராளிகளுக்கு பாலஸ்தீன மக்கள் ஆதரவு அளிக்கின்றனர். ஆனால் போராளிகளை இஸ்ரேல் அரசு பயங்கரவாதிகள் எனக் கூறுகிறது.

இதற்கிடையில், காஸா முனைப் பகுதியில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய வான்வழி தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் முக்கிய தளபதி கொல்லப்பட்டான்.

இதையடுத்து ஒரே நாளில் இஸ்ரேலின் தெற்குப் பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் 200 இற்கும் அதிகமான ராக்கெட்டுகளை ஏவி தாக்குதல் நடத்தினர்.

இந்நிலையில், போராளிகளின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் விமானப்படை வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் 10 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். மேலும், 45 பேர் படுகாயமடைந்துள்ளதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தகவல் வெளியிட்டது. (2)

## மாடியிலிருந்து குழந்தைவண்டி மீது விழுந்த குளிரூட்டி-சிறுமி உயிரிழப்பு

(ஒட்டாவா)

ரொறன்ரோ நகரில் எட்டாவது மாடி யன்னலிலிருந்த குளிரூட்டி ஒன்று குழந்தைகளை கொண்டுசெல்லும் தள்ளுவண்டியின் மீது வீழ்ந்ததில் 2 வயதுச் சிறுமியொருவர் உயிரிழந்தார்.

ரொறன்ரோ நகரில், பிள்ளையைத் தள்ளுவண்டியில் வைத்துத் தாயார் ஒருவர் நடந்து சென்றுகொண்டிருந்த போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.



குளிரூட்டி விழுந்ததில் சிறுமியின் தாயாருக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட சிறுமி பலத்த காயங்களின் காரணமாக சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கட்டடத்தை நிர்வகிக்கும் ரொறன்றோ சமூக வீடமைப்பு நிறுவனம் சிறுமியின் குடும்பத்துக்கு அதன் இரங்கலைத் தெரிவித்தது.

குடியிருப்பாளர்கள் தங்கள் குளிர்சாதனக் கருவிகளைப் பாதுகாப்பான முறையில் யன்னல்களில் பொருத்துமாறு அந்த நிறுவனம் கோரியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக ரொறன்ரோ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2)

## தாய்லாந்து நீதிமன்றினுள் மூன்று பேர் சுட்டுக்கொலை

(பாங்கொக்)

தாய்லாந்தில் நீதிமன்றத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தாய்லாந்தின் கிழக்கு பகுதியில் உள்ள சாந்தபுரி மாகாணத்தில் தலைமை பொலிஸ் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர் தானின் சந்திராதிப் (வயது 67). இவருக்கு அங்கு 1,500 ஏக்கர் பரப்பளவில் சொந்தமாக நிலமுள்ளது.

இந்த நிலத்தின் ஒரு பகுதி தனக்கு சொந்தமானது என கூறி அதே பகுதியை சேர்ந்த ஒருவர் மாகாண நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார். சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

இந்தநிலையில் கடந்த புதன் கிழமை இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

நீதிபதி வருகைக்காக அனைவரும் காத்திருந்தனர். அப்போது நிலப்பிரச்சினை தொடர்பாக இரு தரப்பினருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றி கைகலப்பு ஏற்படும் சூழல் உருவானது.

இதனால் ஆத்திரம் அடைந்த தரப்பினர் வைத்திருந்த துபாக்கியை எடுத்து, எதிர் தரப்பினரை சரமாரியாக சுட்டனர். இதில் நிலத்தில் பங்கு இருப்பதாக வழக்கு தொடர்ந்த நபர் மற்றும் அவரது சட்டத்தரணி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் சரிந்து பலியாகினர். (2)

# மகனைக் காப்பாற்ற தடியால் தாக்கி கணவனைக் கொலை செய்த பெண்

## வாழைச்சேனையில் சம்பவம்

(வாழைச்சேனை)

வாழைச்சேனை கண்ணகிபுரம் பகுதியில் தனது கணவனை தடியொன்றால் தாக்கி பெண் ஒருவர் கொலை செய்தார்.

கணவன், மனைவி இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதால் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இருவருக்கும் இடையிலான வாய்த்தர்க்கத்தின் போது தனது மகனை கூரிய ஆயுதமொன்றால் தாக்க கணவன் முயற்சித்தார்.

இதனை அவதானித்த குறித்த பெண் கணவனைத் தடியொன்றால் தாக்கிக் கொலை செய்ததாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் பலத்த காயமடைந்த கணவன் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

36 வயது நபரே இவ்வாறு உயிரிழந்ததுடன், 16 வயது மகன் அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலை நடத்திய சந்தேக நபரான குறித்த பெண்ணை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்தனர். (இ-7)

## கருத்து முரண்பாடு காரணமாக

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

(வெல்லவாய)

வெல்லவாய சிறிபுர பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றது. இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினைத் தொடர்ந்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

41 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த குண்டுத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான 13 பேரையும் மீண்டும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டது.

நீதவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு இரு வேறு சந்தர்ப்பங்களில் நேற்று முன்தினம் புதன்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது ஆஜர்படுத்தப்பட்டவர்கள் 7 பேராகவும் 6 பேராகவும் இரு வேறு சந்தர்ப்பங்களில் ஆஜர்படுத்தப்பட்டனர்.


இவ்வாறு விசாரணைக்காக வந்த சந்தேக நபர்கள் அனைவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் பாதுகாப்புத் தரப்பினர்களால் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கைதாகி பல மாதங்களுக்குமேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் பொலிஸாரின் ஆட்சேபனையுடன் அனைத்து சந்தேக நபர்களினதும் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டு இவ் வழக்கு விசாரணை அடுத்த வழக்குத் தவணையை எதிர்வரும் நவம்பர் 26 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்வாறு கைதான சந்தேக நபர்கள் அனைவரும் காத்தான்குடி, கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

இதில் கல்முனை சாய்ந்தமருதில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய சந்தேக நபர்களும் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பௌத்த எழுச்சி நிதியத்தின் கீழ் 11 விகாரைகளுக்கு நிதியுதவி



(கொழும்பு)

குறைந்த வசதிகளைக் கொண்ட விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஜனாதிபதியின் வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்படும் பௌத்த எழுச்சி நிதியத்தின் கீழ் 11 விகாரைகளுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பௌத்த எழுச்சி நிதியத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் உள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட பெருமளவு விகாரைகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பொறியியலாளர்களின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காணி சம்பந்தமான பிரச்சினைகள் உள்ள விகாரைகளுக்கு காணி உறுதிகளை வழங்கி அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வீரம்

ஒரு வீரன் எப்படி இருப்பான்? இந்த கேள்விக்கு உங்கள் பதில் என்ன? வீரன் என்றால் அவன் பெரிதாக மீசை வைத்திருப்பான். கையிலே கத்தி வைத்திருப்பான். முழங்கைக்கு மேலே தாயத்துக் கட்டியிருப்பான். கண் சிவப்பாக இருக்கும். ஆள் பயில்வான் மாதிரி இருப்பான். அவன்தான் வீரன். இப்படித்தான் நாம் எல்லோரும் நினைத்துக் கொண் டிருக்கிறோம். ஆனால் வீரன் என்பவன் அவன் இல்லை.

ஒரு ராஜா ஒருநாள் தன்னுடைய அமைச்சரைப் பார்த்துக் கேட்டார். "எங்களுடைய தேசத்திலே இருக்கிறதிலேயே வீரன் யார்? கோழை யார்? என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

உடனே அந்த அமைச்சர் கோழைகள் யார்? வீரர்கள் யார்? என்பதற்கு விளக்கம் கொடுத்தார். கோழை யார் தெரியுமா?

அடுத்தவர்கள் பொருள் நமக்கு கிடைக்குமா? என்கிற நினைப்பிலேயே இருக்கிறவன். முயற்சியே செய்யாதவன்? பாடுபட்டு உழைக்காதவன். சிரமப்பட்டு வேலை செய்து பிழைக்க விரும்பாதவன். குடும்பத்தை காப்பாற்ற முடியாமல் சந்நியாசியாகப் போகிறேன் என்று சொல்கிறவன், இலஞ்சம் வாங்கிறவன் இவர்களெல்லாம் கோழைகள்.

சரி...அப்படியென்றால் வீரம் உள்ளவர்கள் யார்? தன்னம்பிக்கையோடு உழைக்கிறவன், தன்னுடைய உழைப்பிலேயிருந்து கிடைக்கிற பணத்தை சிக்கனமாகச் செலவு செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றிறவன், சுய முயற்சி உள்ளவன், எப்பவும் சுறுசுறுப்பாக இருக்கிறவன். இவர்களெல்லாம் வீரம் உள்ளவர்கள். இது அமைச்சருடைய விளக்கம்.

இந்த விளக்கத்தைக் கேட்டார் ராஜா.

"சரி அமைச்சரே நீங்கள் சொல்வதெல்லாம் சரி. கேட்கிறதுக்கு நல்லாத்தான் இருக்கு. இருந்தாலும் இதை நான் அனுபவத்திலே பார்த்தாத்தான் நல்லா இருக்கும். எங்களுடைய தேசத்திலே இதுக்கு யாரையாவது உதாரணம் காட்ட முடியுமா?'' என்று கேட்டார்.

"காட்டுகிறேன்" என்று சொன்னார் அமைச்சர். கொஞ்ச நாள் கழித்து அந்த ராஜாவுக்குப் பிறந்த நாள் வந்தது. ''அரண்மனையிலே அதை முன்னிட்டு ஒருவாரம் விருந்து. பொதுமக்கள் எல்லோரும் எந்தவித வேறுபாடும் இல்லாமல் வந்து விருந்து சாப்பிட்டுப் போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அரண்மனைக்கு விருந்து என்றால் மக்கள் சும்மா இருப்பார்களா? கூட்டம் கூட்டமாக அரண்மனைக்குப் போனார்கள். விருந்து சாப்பிட்டார்கள். தினமும் கோலாகலமாக இது நடந்து கொண்டிருக்கிறது. அந்தச் சமயத்திலே ஒருநாள் அந்த ராஜாவும் அமைச்சரும் வெளியே உலாவப் போனார்கள். ஊருக்கு வெளியே ஒரு வயதான ஆள் வயலிலே வேலை செய்து கொண்டிருந்தான். அவன் இவர்களை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவன் பாட்டுக்குத் தன்னுடைய வேலையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

ராஜாவும் அமைச்சரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். அந்த அமைச்சர் மெதுவாக அந்த ஆளிடம் போனார். "ஏன் பெரியவரே! அரண்மனையிலே விருந்து நடக்குதே, அது உனக்குத் தெரியாதா? மக்கள் எல்லோரும் போய் சாப்பிட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். நீயும் போய் வயிறார சாப்பிட்டு வர வேண்டியது தானே" என்றார். அதுக்கு அந்த ஆள்,

"அரண்மனையிலே விருந்து நடக்கிறது எனக்குத் தெரியும். நீங்கள் சொன்னதுக்கு நன்றி. இருந்தாலும் என் கையாலே உழைத்து அதனாலே கிடைக்கிற சொற்ப வருமானத்திலே சாப்பிடுகிற சாதாரண சாப்பாடே எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அரண்மனை விருந்தை விட இதுதான் எனக்குப் பெரிது. அதுவுமில்லாமல் அரண்மனையிலே ஒரு வாரத்துக்கு வேணும் என்றால் விருந்து சாப்பாடு போடுவார்கள். அதன் பின்பு என்ன செய்கிறது?" என்று சொல்லிப் போட்டு தொடர்ந்து தன்னுடைய வேலையை கவனிக்க ஆரம்பித்தார். இப் அந்த அமைச்சர் அந்த ராஜாவைப் பார்த்தார். என் வாழ்நாளிலேயே நான் பார்க்கிற வீரம் உள்ள ஆள் இவர் ஒருத்தர் தான்'' என்றார். ராஜாவும் அதை ஒத்துக் கொண்டார்.

இந்தக் கதையை கேட்டுக்கொண்டு இந்தக் காலத்து ஆசாமி ஒருத்தர் சொன்னார்,

"என்னுடைய பிறந்த நாளுக்கும் நான் வருடா வருடம் விருந்து வைப்பேன். நண்பர்களையெல்லாம் கூப்பிடுவேன். அடுத்த வாரம் அந்த பிறந்த நாள் வருகிறது. இந்தத் தடவை எனக்கு ரொம்பவும் நெருக்கமான ஒரு நண்பனை நான் கூப்பிடப் போறதில்லை'' என்றார் ரொம்ப உறுதியாக.

ஏன் சேர் என்றேன். "போன வருடம் பிறந்த நாள் அன்றைக்கு வந்தவன் இன்னும் திரும்பிப் போகவில்லை சேர்" என்றார்.

# அமைதிக்காலத்தில் எவ்வித அசம்பாவித சம்பவங்களும் பதிவாகவில்லை-பொலிஸ்


(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் நடைமுறையாகியுள்ள அமைதிக்காலத்தில் எவ்விதமான அசம்பாவித சம்பவங்களும் பதிவாகவில்லையென தேர்தல் பணிகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் அபேசிரி குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்தன.

இந்த நிலையில் அமைதிக் காலத்தில் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்துப் பிரசார செயற்பாடுகளும் தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மட்டக்களப்பு மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாநகர சபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு 26 உறுப்பினர்களின் ஆதரவோடு வெற்றிபெற்றுள்ளதாக மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

குறித்த வரவு-செலவுத் திட்ட முன்மொழிவை அங்கீகரிக்கக் கோரும் விசேட சபை அமர்வு நேற்று முன்தினம் (புதன்கிழமை) இரவு மாநகர முதல்வர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அமர்வில் மாநகர பிரதி முதல்வர் கே. சத்தியசீலன் உட்பட மாநகரசபை ஆளும், எதிர்த்தரப்பு உறுப்பினர்கள், ஆணையாளர், பிரதி ஆணையாளர், பொறியியலாளர், கணக்காளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு மாநகரசபை முதல்வரால் வாசிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டது. இதற்கு ஆதரவாக 26 வாக்குகளும் எதிராக 09 வாக்குகளும் அளிக்கப்பட்டதுடன், இரண்டு வாக்குகள் நடுநிலையாகவும் இடப்பட்டிருந்தன.

அத்துடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர் ஒருவர் சபை அமர்வில்கலந்து கொண்டிருக்கவில்லை. இவ் வரவு- செலவுத் திட்டத்தின் முன்மொழிவில் 2020ஆம் ஆண்டிற்கான மொத்த வருமானமாக 421.7 மில்லியன் ரூபாய்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. அதில் சபையின் வருமானம் 197.9 மில்லியன் ரூபாய் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# தேர்தல் அதிகாரிகளுக்கு செயலமர்வு



(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பணியாற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கான செயலமர்வு நேற்று வியாழக்கிழமை காலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ. புஸ்பகுமார, மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் எஸ். சுதாகரன் ஆகியோர் இதில் கலந்துகொண்டு அதிகாரிகளுக்கான தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கினர்.

இதன்போது சர்வதேச தேர்தல் கண்காணிப்புக்குழுவின் உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திருகோணமலை மாவட்டத்தில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தியடைந்திருப்பதாக திருகோணமலை மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் எஸ். சுதாகரன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "இம்முறை திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் வாக்குப்பதிவிற்காக 307 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் விசேட தேவையுடைய வாக்காளர்கள், வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்குத் தேவையான அனுமதிப் பத்திரங்களை கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வாக்குகளை எண்ணும் நிலையமாக திருகோணமலை தொழில்நுட்பவியல் கல்லூரியில் 21 சாதாரண வாக்கெண்ணும் நிலையங்களும் 9 தபால் மூல வாக்கெண்ணும் நிலையங்களிலும் வாக்கெண்ணும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னாயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

# செய்தித்துளிகள்

## மதுபானசாலைகளுக்குப் பூட்டு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இரண்டு நாட்களுக்கு நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளை 16 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜேர்மன் நாட்டுப் பிரஜை கடலில் மூழ்கி உயிரிழப்பு

(மொரகல்ல)

மொரகல்ல பிரதேசத்தில் கடலில் நீராடிக் கொண்டிருந்த ஜேர்மன் நாட்டுப் பிரஜை ஒருவர் மூழ்கி உயிரிழந்தார்.

78 வயதுடைய் குறித்த நபர் நேற்று முன்தினம் நீராடிக் கொண்டிருந்த போது இவ்வாறு உயிரிழந்தார். (இ-7)

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

(கந்தளாய்)

திருகோணமலை கந்தளாய் தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 2100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த இளைஞரொருவரை நேற்று முன்தினம் இரவு கைது செய்ததாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்பதோடு போதைப் பொருள் வழக்குகளும் சந்தேக நபருக்கெதிராக நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## வான் மோதி பாதசாரி பலி!

(ஹொரணை)

இரத்தினபுரி - பாணந்துறை பிரதான வீதியின் ஹொரணை, இலிம்ப சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் நபரொருவர் உயிரிழந்தார்.

வீதியைக் கடக்க முற்பட்ட ஒருவர் வான் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி சிகிச்சைக்காக ஹொரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

57 வயதுடைய, மூனகம பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இந்த விபத்தில் உயிரிழந்தார். விபத்து தொடர்பில் வானின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில், ஹொரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 140 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 260 | 280 | 230 | 300 |
| தக்காளி | 120 | 120 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 | 80 |
| கோவா | 140 | 150 | 150 | 110 | 160 |
| கரட் | 200 | 200 | 280 | 200 | 300 |
| பூசணி | 60 | 80 | 60 | 70 | 100 |
| புடோல் | 120 | 80 | 90 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 340 | 350 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 140 | 190 | 160 |
| பாகற்காய் | 250 | 250 | 250 | 160 | 300 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 160 | 140 | 120 | 130 | 160 |
| லீக்ஸ் | 250 | 250 | 320 | 140 | 300 |
| பீற்றூட் | 250 | 80 | 200 | 90 | 200 |
| கறிமிளகாய் | 300 | 220 | 320 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 400 | 360 | 550 | 300 | — |
| போஞ்சி | 120 | 180 | 150 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 140 | 120 | 160 | 90 | 100 |
| கீரை -1பிடி | 40 | 40 | 80 | 50 | 60 |
| தேசிக்காய் | 130 | 200 | 150 | 230 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 45-60 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 350 | — | 400 | 150 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 140 | 80 | — | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 80 | 150 | 100 |

## தண்டனைகளுக்குத் தடை; வறுமைக்கு முற்றுப்புள்ளி

# சிறுவர்களைப் பாதிக்கும் 6 விடயங்கள் மீது கவனம் செலுத்துமாறு அவசர வேண்டுகோள்

## இலங்கையிடம் யுனிசெப் விடுத்தது

(லண்டன்)

இலங்கையில் 6 மில்லியன் சிறுவர்களைப் பாதிக்கும் 6 பிரதான விடயங்கள் மீது கவனம் செலுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் நிறுவனம் அவசர வேண்டுகோள் விடுத்தது.

நேற்று வியாழக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்ட அந்த நிறுவனம் இந்த வேண்டுகோளை முன்வைத்தது.

குறித்த அறிக்கையில் "நியாயமானதும் செழிப்பானதுமான எதிர்காலம் ஒன்றீறக் கட்டியெழுப்புவதற்கு இந்தத் தேர்தல் இலங்கைக்குக் கிடைத்த அரியதொரு வாய்ப்பாகும்.

இதனை அடைவதற்கு இலங்கையின் 6 மில்லியன் சிறுவர்களில் எந்தவொரு சிறுவரும் புறந்தள்ளப்படாது இருப்பதை நாம் உறுதி செய்தல் வேண்டும்.

இலங்கையானது பல இலட்சக்கணக்கான குடும்பங்களை வறுமையின் பிடியிலிருந்து மீட்டுள்ளது.

5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களின் இறப்பு வீதம் வெகுவாகக் குறைந்துள்ளது. ஆரம்ப் பாடசாலையில் ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் வருகை உலகளாவிய எண்ணிக்கையை எட்டியுள்ளது.

இருந்தபோதும் தமது திறனை வெளிப்படுத்துவதற்கு எமது உதவியை நாடி பல சிறுவர்கள் காத்திருக்கின்றனர்.

இலங்கையின் 6 மில்லியன் சிறுவர்கள் சார்பில் நடவடிக்கை எடுப்பதற்கான சக்தியும் பொறுப்பும் இலங்கையின் அடுத்த ஜனாதிபதிக்கு உள்ளது.

சிறுவர்களை பாதிக்கும் பிரதான 6 விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துமாறு அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் வேண்டுகோள் விடுப்போம்.

இலங்கையின் எதிர்காலத்திற்காகவும் அதன் எதிர்காலச் சந்ததியினருக்காகவும் இன்றே செயற்படுவோம்.

இலங்கையிலுள்ள ஒவ்வொரு சிறுவருக்காகவும் நாம் கவனம் செலுத்த வேண்டிய 6 முக்கிய விடயங்களை யுனிசெப் இனங்கண்டுள்ளது.

1.சிறுவர்களின் மந்த போசாக்கை நிரந்தரமாக ஒழித்தல். சமூக அடிப்படையிலான பராமரிப்பு மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டிற்கான சிகிச்சை ஆகியவற்றுக்கான முதலீடுகளை அதிகரித்து இலங்கைச் சிறுவர்களின் மந்த போசாக்குப் பிரச்சினையை நிவர்த்தி செய்தல்.

2.இளவயதினரை எதிர்காலத்திற்காகத் தயார்படுத்தும் கல்வி முறை ஒன்றை உருவாக்குதல்.

3. சிறுவர்களின் வறுமை நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து. ஒவ்வொரு சிறுவருக்கும் வாழ்க்கையில் வெற்றியீட்டுவதற்கு சமனான வாய்ப்பை அளித்தல்.

4.சிறுவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் உடல் ரீதியான தண்டனைகளைத் தடை செய்தல்.

5.அனைவரையும் உள்ளடக்கிய சமாதானமான இலங்கையைக் கட்டியெழுப்புதல்.

6. காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடி, அதன் விளைவுகளுக்கு முகங்கொடுக்க இலங்கையை ஆயத்தம் செய்தல்.

உள்ளிட்ட அம்சங்களே அந்த வேண்டுகோளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இ-7)



சாவகச்சேரி மகளிர் கல்லூரி சேவையாளர் சங்கத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஒன்றுகூடல், களப்பயணம் மற்றும் 2020ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு ஆகியன திருகோணமலை மாவட்டத்தை மையப்படுத்தி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. சமய, வரலாறு மற்றும் புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தரிசித்த சங்கத்தினர் நிலாவெளி Orient Beach Way நட்சத்திர விடுதியில் தலைவர் ம.சசிகரன் தலைமையில் ஒன்றுகூடலை நடத்தி புதிய நிர்வாக உறுப்பினர்களையும் தேர்வு செய்தனர். (படங்கள்:- சுபேசன்)

## விபத்தை ஏற்படுத்திவிட்டு மாயமாய் மறைந்த கார்

### குடும்பஸ்தர் உயிரிழப்பு, சாரதி கைது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையின் மாவடிவேம்பு பிரதேசத்தில் கட்டுப்பாட்டை மீறிப் பயணித்து விபத்தை ஏற்படுத்தி விட்டு மாயமாய் மறைந்த காரை மூன்று நாட்களின் பின்னர் அம்பாறையில் வைத்துக் கைப்பற்றியுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம்புதன்கிழமை மாலை குறித்த கார் அம்பாறை நகரில் கைப்பற்றப்பட்டதுடன் அதனைச் செலுத்திச் சென்ற சாரதி மட்டக்களப்பு கல்லடியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமையன்று மாலை மாவடிவேம்பில் வீதிக் கட்டுப்பாடுகளை மீறி இந்தக் கார் பயணித்த வேளையில் வீதி மருங்கில் நின்றிருந்த குடும்பஸ்தர் ஒருவர் காரால் மோதப்பட்டு படுகாயமடைந்த பின்னர் அன்றைய தினமே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மரணமடைந்திருந்தார்.

மேலும், கட்டுப்பாட்டை மீறிய அந்தக் கார் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தையும் மோதிசேதப்படுத்திச் சென்றுள்ளது.

எனினும் அந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயமேற்படவில்லை.

எனினும், இவ்விரு சம்பவங்களிலும் சம்பந்தப்பட்ட கார் மாயமாய் மறைந்திருந்த வேளையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

மட்டக்களப்பு கொழும்பு நெடுஞ்சாலை வழியேயுள்ள சிசிரிவி கமராக்கள் பரிசோதிக்கப்பட்ட நிலையில் விபத்தை ஏற்படுத்திய கார் ஏறாவூர் புன்னைக்குடா வீதி, கடற்கரைத் தளவாய் வீதி வழியாகச் சென்று மட்டக்களப்பை அடைந்திருந்தது தெரியவந்தது.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் அந்தக் காரைச் செலுத்திச் சென்ற சாரதி கல்லடியில் வைத்துக் கைது செய்யப்பட்டதோடு காரும் அம்பாறை நகரில் கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## முடிவுக்கு கொண்டுவரப்பட்டது உண்ணாவிரதப் போராட்டம்



(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ இரட்டை குடியுரிமையை துறந்தமை தொடர்பான ஆவணங்களை வெளியிடக் கோரி பௌத்த தேரரால் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

குறித்த கோரிக்கையை முன்வைத்து சுமங்கல தேரர் கடந்த ஞாயிற்றுக்கிழமை-முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

இந்நிலையில், நேற்று வியாழக்கிழமை காலை தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். பொலிஸாரின் அறிவுறுத்தலையடுத்தே, தேரர் நேற்றுக் காலை உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார். (இ-7)

## தயவுசெய்து எனக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுங்கள் ரோயல் பார்க் கொலைக் குற்றவாளி வேண்டுகோள்



(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ரோயல் பார்க் கொலை சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட ஜூட் ஸ்ரீமந்த ஜெயமஹவே தனக்கு இரண்டாவது சந்தர்ப்பம் வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று வியாழக்கிழமை வெளியிட்ட கடிதத்தில், இனி ஒருபோதும் எவருக்கும் தீங்கு செய்ய விரும்பவில்லை என்றும் நடந்ததற்கு வெட்கப்படுவதாகவும் கூறியே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

"நான் தவறு இழைத்தேன். அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. ஆனால் நான் திருந்தியிருக்கிறேன். நான் திருந்தி வாழ ஒரு வாய்ப்பைத் தாருங்கள்.

எனது விடுதலை கடந்த 3 வருட காலம் பரிசீலிக்கப்பட்டு வந்தது. அது இப்போது எடுக்கப்பட்ட ஒரு முடிவல்ல. அத்தோடு அதில் எந்த அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை.

சிறைக்குள் இருந்து கல்வி கற்று கடந்த 15 வருட காலம் என்னை நான் வருத்தி திருத்திக் கொண்டேன். யுவோன் என் மனதிலிருந்து நீங்க மாட்டார். அவரின் குடும்பத்திடம் பாவமன்னிப்பு கேட்க முயற்சித்தாலும் அதற்கு சாத்தியம் ஏற்படவில்லை" என அவரின் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2005 ஆம் ஆண்டு ராஜகிரியவிலுள்ள ரோயல் பார்க் வீட்டு வளாகத்தில், யுவோன் ஜோன்சன் என்ற 19 வயது சுவீடன்-இலங்கை வம்சாவளி யுவதியொருவர் ரோயல் பார்க் என்ற அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து கீழே தள்ளி விழுத்தி கொல்லப்பட்டார்.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட 34 வயது ஜூட் ஸ்ரீமந்த ஜெயமஹவேயை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதாக ஜனாதிபதி மைத்திரி கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

அவரது இந்த முடிவு பொது மக்கள், சில அரசியல்வாதிகள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## உயிர் வாழ நீர்



நீரின் முக்கியத்துவம் கடந்த அரை நூற்றாண்டுக்கு முன்னரே மனிதனால் உணரப்பட்டுவிட்டது. இதன் ஓர் அங்கமாக 1992ஆம் ஆண்டுரியோடிஜெனிரோவில்நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் செய்யப்பட்ட சிபாரிசையடுத்து மார்ச் 22ஆம் திகதியை உலக நீர் தினமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை பிரகடனம் செய்தது. அதைத் தொடர்ந்து கடந்த 27 வருடங்களாக இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அருந்தலாகக் கிடைக்கின்ற நீர்வளத்தை மனிதன் தன் தேவைக்குத் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்த்துவதற்காகவே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. சர்வதேச நீர்வள தினத்தின் கருப்பொருள் நீர்வளத்தை மதிப்பிட்டு, மிகப் பயனுள்ள வகையில் அதனை முகாமைத்துவம் செய்தலாகும். உயிருள்ள அனைத்து ஜீவன்களினதும் இயக்கத்துக்கு ஆதாரம் நீர். உயிரற்ற ஜடங்களின் தூய்மை பேணவும் உதவுவது நீர். நீரின்றி உலகமே இல்லை. எல்லா வளங்களுக்கும் மூலவளம் நீரே. உலக மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த உன்னத பொக்கிசமே நீர் ஆகும். நீர் வளமானது சகல உயிரினங்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியத் தேவையாகும். அதனை பயன்படுத்துவோர்களிடையே மேலும் மேலும் தேவைகள் அதிகரிப்பதனால் இன்று நீர் போட்டிப் பொருளாகவும், சந்தைப் பொருளாகவும் கூட மாறிவிட்டது. அதாவது கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் "போத்தலில் நீர் அடைப்பட்டு விற்கப்படும்" என யாராவது கூறியிருந்தால் அனைவரும் நகைத்திருப்போம். ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. சுத்திகரிக்கப்பட்டு போத்தலில் அடைக்கப்படாத நீரை நம்மில் யாராவது அருந்தினால் மற்றவர்களால் தரக்குறைவாகப் பார்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. பூமியெனும் உயிரின வாழ்விடத்தைத் தவிர வேறு எந்தக் கோளிலும் நீரில்லை என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக அங்கெல்லாம் உயிரினம் இல்லை என கூறப்படுகின்றது. வேற்றுக் கிரகங்களில் மரம், செடி கொடி, ஆறு, குளம், ஓடைகள் என எதுவும் இல்லை. இதன் காரணமாகவே அந்த கிரகங்களில் உயிரினங்கள் இல்லையென இதுவரை நடத்தப்பட்ட கண்டுபிடிப்புக்கள் நிரூபித்துள்ளன. நீர் உயிரின் ஆதாரமாதலால் உயிர்களனைத்துக்கும் அதுவே ஜீவாதாரமாகத் திகழ்கின்றது. நீர் இல்லை என்றால் இந்த உலகிலும் உயிருள்ள ஜீவன்கள் எதுவும் இருக்க மாட்டாது. உணவு இல்லை என்றால் அதனை உற்பத்தி செய்து கொள்ளலாம். உடை இல்லை என்றாலும் அதனையும் உற்பத்தி செய்து கொள்ளலாம். ஆனால் நீர் இல்லாது போய்விட்டால் அதனை எந்த ஒரு சக்தியாலும் உற்பத்தி செய்யவே முடியாது. இயற்கையாக இறைவனால் படைக்கப்பட்ட சிலவற்றை மனிதனால் படைக்க முடியாது. மனித சமுதாயத்துக்கு நீரின் பயன்கள் அளப்பரியது. பிறப்பிலும், வாழ்விலும், இறப்பிலும் கூட இணைபிரியாத இன்றியமையாத சாதனமாக விளங்குவது தண்ணீராகும். "நீரின்றி நிலமில்லை, நிலமின்றி நீரில்லை" எனும் தத்துவத்தைப் போதிக்கும் மகத்துவம் நிறைந்த தண்ணீரின் பெருமைகளை எல்லா மதங்களும் மகிமைப்படுத்துகின்றன. எமது இந்துமதக் கிரியைகள் பலவற்றில் நீர் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஒவ்வொரு வருடமும் உலக நீர் தினத்துக்கென ஒரு தொனிப்பொருள் பிரகடனம் செய்யப்படுகிறது. அந்த வகையில் 2019ஆம் ஆண்டின் தொனிப் பொருள் **"Leaving no one behind"** என்பதாகும்.

நீர்வளத்தின் முக்கியத்துவம் எல்லாக் காலங்களிலும் உணரப்பட்டு வந்துள்ளது. உலக வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும் போது புகழ்பெற்ற உலக நாகரிகங்கள் எல்லாம் நீர்நிலைகளை அடிப்படையாகக் கொண்டே தோன்றியுள்ளன. நைல்நதி, சிந்து நதி, யூப்பிரடிஸ், தைகிறீஸ் போன்றன உலக நாகரிகங்களின் பிறப்பிடங்கள் எனப்படுகின்றது. எனவே இத்தகைய நாகரிக எழுச்சியின் மூலமே நீர் என்பது புலனாகின்றது. பூமியின் நிலப்பரப்பில் 75 சதவீதம் இருப்பது நீர் எனினும் உலக சனத்தொகையின் ஒவ்வொரு நான்கு பேரிலும் மூவர் அருந்துவதற்கு தூய நீரின்றி அவதிப்படுகின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன. எமது இலங்கை நாட்டின் 25 மாவட்டங்களுள் 14 மாவட்டங்களில் வாழும் மொத்த சனத்தொகையின் 33 சதவீதமானவர்களுக்கு தூய குடிநீர் கிடைப்பதில்லை. உலக நீர்ப்பரப்பில் 97.5 சதவீதம் உப்பு நீராகவும், 2.5 சதவீதம் நன்னீராகவும் உள்ளது. நன்னீர்ப் பரப்பிலும் 69 சதவீதம் பனிக்கட்டியால் மூடப்பட்ட பிரதேசமாகும். 30 சதவீதம் நிலக்கீழ் நீர். 3 சதவீதம் நன்னீர் ஏரிகளும், நதிகளும் எஞ்சிய பகுதி ஈரழிப்பு தரைப் பிரதேசங்களுமாகும். உலகளாவிய ரீதியில் பார்க்கும்போது நீரை அதிகமாகப் பயன்படுத்தும் துறை விவசாயமாகும். 85 சதவீத நீர் விவசாயத்துக்காக பயன்படுத்தப்படுகின்றது என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கைத்தொழில்த்துறை 10 சதவீதத்தைப் பயன்படுத்துகின்றது. எஞ்சிய 5 சதவீதமே வீட்டுப் பாவனைக்குரியது. எனவே, அருமையாக உள்ள வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையுமென குறிப்பிடப்படுகின்றது. நகரமயமாக்கல் பல்வேறு நீர்ப்பிரச்சினைக்குக் காரணமாகின்றது. சுற்றுப்புறச் சூழலின் சுகாதாரம் பேணப்படாமையால் நீர் மூலம் உண்டாகும் வியாதிகள் பலவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எமது சூழலில் வீசப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளில் மழை நீர் தேங்குவதால் அது டெங்கு நுளம்பின் பெருக்கத்திற்கு வித்திடுகின்றது. தற்போது எமது நாட்டில் மழைக்காலமாக இருப்பதனால் எமது சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக பேணவேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

உலகில் உள்ள வறிய நாடுகள் நிலக்கீழ் நீரைப் பெற்றுக் கொள்ளும் அளவில் போதாமை காணப்படுகின்றது. இதற்குக் காரணம் காடழிப்பு மற்றும் வனாந்திரமாதல் ஆகியவற்றால் மழைவீழ்ச்சி குறைவடைந்து வருகின்றமையாகும். வருடாந்தம் உலக சனத்தொகை 90 மில்லியனால் அதிகரித்துச் செல்கின்றது. அந்தளவு நீரைப் பயன்படுத்தும் மக்களும் வருடாந்தம் அதிகரித்து வருகின்றனர். "நீர் தீர்ந்துபோன ஒரு வளம்" என்பது பற்றிய உலகளாவிய விழிப்புணர்வு ரியோடி ஜெனிரோவில் நடந்த புவி உச்சி மகாநாட்டிலும், 1992இல் "நீரும் சுற்றாடலும்" பற்றிய டப்ளின் மகாநாட்டிலும் பிரதிபலித்தது. ரியோ- டப்ளின் மகாநாட்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட நீர்வள முகாமைத்துவம் சம்பந்தமாக சர்வதேச நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. வீட்டுப் பாவனையாளர் சங்கங்களும், கமக்காரர் அமைப்புக்களும் முறையே வீட்டுத்தேவை, விவசாயத்தேவை என்பனவற்றுக்காக நீரை முகாமைத்துவம் செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டார்கள். உலகில் பாதுகாப்பான நீரின்றி 8 செக்கன்களுக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் மரணம் நிகழ்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு வருடமும் உலகில் ஒரு கோடியே 50 இலட்சம் குழந்தைகள் உயிரிழப்பதற்கு பாதுகாப்பற்ற குடிநீர் முதல் காரணமாக அமைகிறது. நீர் தொடர்பான நோய்களினால் இறப்பவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துக் கொண்டே போகிறது. உலகில் மூவரில் ஒருவருக்குப் பாதுகாப்பான குடிநீர் உறுதி செய்யப்படவில்லை. நீர்ப் பற்றாக்குறையும், புவி வெப்பமயமாதலும் மனித குலம் இன்று எதிர்கொள்ள ஆரம்பித்திருக்கும் பேராபத்துக்களாகும். இவ்விரு பேராபத்துக்களையும் சமாளிப்பதற்கு உலக நாடுகள் தங்களை எந்தளவுக்கு உருப்படியான முறையில் தயார்படுத்தியிருக்கின்றன என்பதை நோக்கும்போது வேதனையே மிச்சமாகிறது. ஒரு குடம் நீர் வேண்டி மைல் கணக்கில் நடக்கும் மக்கள் உலகில் வாழ்கிறார்கள் என்பதை மறந்து நாம் பொறுப்புணர்வின்றி வாழக் கூடாது. நீரின்றி அமையாது உலகு என்று வள்ளுவர் சொன்னதை மனதிலிருத்திச் செயற்படுவோம்! நீர்ப்பிரச்சினைகளின் பாரதூரமான விளைவுகள் குறித்து நீண்டகாலமாக ஆராயப்பட்டு வந்துள்ளது. இதற்கான விதப்புரைகள் 1977இல் ஆர்ஜென்டீனாவில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் நீர்வள மகாநாட்டில் உருவாக்கப்பட்டன. அதன்பின் 1992இல் நடந்த ரியோ மகாநாடு, 1994இல் ரியோவில் நடந்த சுற்றாடலும் அபிவிருத்தியும் மகாநாடு என்பன உலகில் நன்னீர் வளங்களை மதிப்பிட வேண்டும் என்பதை வலியுறுத்தின. 1997இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபை இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியது. உலக வானிலை அவதான அமைப்பும் (WMO) யுனெஸ்கோவும் 1997இல் உலக நீர்வள தினத்தைக் கொண்டாடுவதற்கான தலைமை முகவராகப் பணியாற்றின. சென்னை நீரியல் துறை அறிஞர் பேராசிரியர் ஏ. மோகனகிருஸ்ணனின் கூற்றில், உலகிலுள்ள 240 பெரும் ஆறுகள் உள்ளூர்ப் பாவனைக்கு போதுமானவையாகவே உள்ளன எனவும் பெருகிவரும் சனத்தொகையால் நீர்வளம் அருகி வருகின்றது எனவும் 21ஆம் நூற்றாண்டில் இந்நிலை மேலும் உக்கிரமடையும் எனவும் உலக யுத்தம் ஒன்று மீண்டும் ஆரம்பிக்குமானால் அது நீருக்காகவே ஏற்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் வழமையாக உலக நீர் தினத்தில் நீர் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அமைச்சரின் செய்தியும் பத்திரிகைகளில் விசேட அனுபந்தங்கள் மற்றும் கட்டுரைகளும் வெளியாகுவதைத் தவிர, மக்கள் மத்தியில் பெரியளவில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய உருப்படியான செயற்றிட்டங்கள் எதுவுமே முன்னெடுக்கப்படுவதில்லை. நீர்ச்சிக்கனம், நீர்த் தூய்மை, நீர்ச்சேமிப்பு குறித்து விழிப்புணர்வும் அக்கறையும் எம்மத்தியில் எந்தளவுக்கு இருக்கிறது என்பது மனச்சாட்சியைத் தொட்டுப்பார்க்கும்போது ஒவ்வொருவருக்கும் பிரகாசமாக விளங்கும். வீதியோரக் குழாயில் நீர் வீணே வடிந்து கொண்டிருக்கும்போது ஒரு நிமிடம் தாமதித்து நின்று அக் குழாயைப் பூட்டுவதற்கு எம்மில் எத்தனைபேர் உண்மையில் மானசீகமாக அக்கறை காட்டுகிறோம். நீர் விவகாரத்தில் இது எமது மனச்சாட்சிக்கு ஒரு அமிலப் பரீட்சையாகவே அமைந்துவிடுகிறது. இலங்கையின் நீர்வள முகாமையின் வரலாறு பெரும்பாலும் வழங்கல் வரலாறாகவே இருந்தது. பண்டைய நீர்ப்பாசனக் குளங்கள் தேவையான நீரை விநியோகித்தன. இலங்கையின் தற்போதைய நீர் நிலைமை பற்றி விவசாயத்துறை நிபுணர் கலாநிதி சி.ஆர். பானப்பொக்கே நமது நீர்ப்பாவனை பற்றி நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீர்ப்பாவனை குறித்து நமது பழக்கவழக்கங்களும், பண்பாடும் மாறவேண்டும். இன்றேல் அடுத்த நூற்றாண்டில் நாம் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்று கூறியுள்ளமை சிந்திக்கத்தது. தற்போது இலங்கையில் நீர் முகாமைத்துவ நடவடிக்கைகள் ஆசிய அபிவிருத்தி வங்கி, **USAID** தாபனம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை குடிநீரை விநியோகிக்கின்றது. நீர் பற்றி செவ்விந்தியத் தலைவர் சியாட்டில் **(Siyattle)** கூறியுள்ள கூற்று நீரின் அருமையைக் குறித்து எமது சிந்தனையைத் தூண்டுவதாகும். இந்த நாடு நமக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இங்கு அருவிகளிலும், ஆறுகளிலும் ஓடும் ஒளிர்விடும் நீர் வெறுமனே நீர் அன்று. இது எம் முன்னோரின் இரத்தம், அவை புனிதமானது என்பதை நினைவு கூர வேண்டும். மேலும் எமது பிள்ளைகளுக்கும் அவற்றின் புனிதத் தன்மையையிட்டு அறிவுறுத்த வேண்டும். உலக நீர் தினம் நினைவு கூறப்பட்டால் மட்டும் போதாது. அதன் தாற்பரியம் பேணப்படல் வேண்டும். மனித வாழ்வோடும், சடங்கு சம்பிரதாயங்களோடும் பின்னிப் பிணைந்தது தண்ணீரின் வரலாறு. உலக முன்னேற்றத்துக்கேற்ப, சனத்தொகைப் பெருக்கத்துக்கேற்ப, தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப நீரின் தேவை நாளும் பொழுதும் அதிகரித்து வருகிறது. அதே வேளை தூய நீரின் எல்லை அருகி வருகிறது. நாம் நாமே நினைக்காத வரையில் நீர்ப்பற்றாக்குறை நீங்குவது சாத்தியமல்ல. நீரை வீணே விரயம் செய்வதும், எல்லை இன்றி பயன்படுத்துவதும், நீர்ப்பற்றாக்குறை நிதமும் நிலவவே வழி செய்யும். எனவே, நீர் எங்கள் உயிருக்கு நேர் என்று நாம் கருதி செயற்பட வேண்டும். ஒவ்வொரு துளி நீரும் ஒவ்வொரு பவுண் தங்கம் என எண்ணி நாம் நடந்து கொள்ள வேண்டும். நீர் இன்றேல் பார் இல்லை என்று நாம் கருத வேண்டும். அனைத்து வளங்களுக்கும் தாய்வளம் தண்ணீர். ஊர் வளம் பெற, பார் வளம் பெற நீர் வளம் காப்போம் என திட சங்கற்பம் பூணுவோம்.

அ.குகன்,
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி.

**புதிர் 222 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

நிதுஜா சிவகுமாரன்
சோழன் தோட்ட வீதி
கோண்டாவில் மேற்கு

**புதிர் 230 க்கான சரியான விடை:**
6400 km

## வாரத்திற்கு ஒரு புதிர்! 231

நீரின் அடர்த்தி எவ் வெப்பநிலையில் உயர்வுப் பெறுமதியைக் கொண்டிருக்கும்?

புதிர் 231 இற்கான விடைகளை 25.11.2019 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

அ.குகன், விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A
ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 231**

சரியான விடை:-..............................


முழுப்பெயர்:-..............................

முகவரி:-..............................

தொ.பே. இல:..............................

கையொப்பம்:..............................

# இறைபக்தி கொண்ட தூயவர் அமரர் கா.சிவபாலன்



## மறைந்தார் மாண்பு

சைவத்திரு காசிநாதர் சிவபாலன் அமரத்துவம் அடைந்து இன்று ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது. மட்டுவில் மண் சைவத்தமிழ் வளர்க்கும் அதை பேணிப் பாதுகாக்கும் சிவபூமியாக விளங்கி வருகின்றது. அத்தகைய மண்ணில் காசிநாதருக்கும் சிவகாமி சுந்தரிக்கும் மகனாகத் தோன்றித் தவ வாழ்க்கை வாழ்ந்த மாந்தனே அமரர். சாதாரணமானவர்கள் மனிதர்களாக வாழ்கின்றனர்.

நிறைமொழியுடைய இறை இன்ப அனுபவத்தில் மூழ்கித் திளைக்கும் மனிதர்களே மாந்தர் என சிறப்பு பெறுபவர். கல்வியில் ஈடுபாடுள்ள குடும்ப பரம்பரையாக உள்ள உறவுகள் நிறைந்தவர்கள் இவருக்கு உறவினராக இருந்துள்ளார்கள்,இருந்து வருகின்றார்கள்.

இவருடைய தந்தையார் கந்தர் காசிநாதர் சந்திரமௌலீசவர வித்தியாசாலை மட்டுவில் பதியில் தோன்றுவதற்கு நிலம் அளித்து பாடசாலை ஸ்தாபகராக இன்றும் பாடசாலை சமூகத்தால் நினைவு கொள்ளப்பட்டு வருகின்றார்.

அமரர் சிவபாலன் ஆரம்பக் கல்வியை மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்திலும் உயர்கல்வியை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் கற்று பின் தனது இளமைக்காலத்தில் அதி உயர் ஆன்மீக சிந்தனையுடன் பெரிய தந்தை முறை உறவுக்காரனான மட்டுவில் முத்துமாரியம்பாள் தர்மகர்த்தா இ.தாமோதரம்பிள்ளையுடன் துணைநின்று மட்டுவில் முத்துமாரியம்பாள் ஆலய வளர்ச்சிக்கு உழைத்தவேளை 1978 ஆம் ஆண்டில் செல்வி. அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையிலான நிர்வாகத்திற்கு பத்திரிகை ஊடாக பிரதம லிகிதர் பணி கோரப்பட்டதை அடுத்து அவரது தந்தையின் அண்ணனாகிய கந்தர் வல்லிபுரம் அவர்களினால் அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு முகவரியிட்டு எழுதப்பட்ட சிபாரிசுக் கடிதத்துடனும் அமரர். சிவபாலனின் குருவாக வரிந்து கொண்ட பண்டித மணி சி.கணபதிபிள்ளையினால் வழங்கப் பெற்ற அறிமுக நற்சான்றுடனும் நேர்முகத் தேர்வில் பங்குபற்றினார்.

இளவயது முதற்கொண்டே பிரதி ஞாயிறு தோறும் பகலிலும் 'இரவிலும் பேசாத விரதம் (மௌனவிரதம்) மேற்கொண்டு வந்த வேளை இவர் நேர்முகத்தேர்வில் பங்குபற்றிய வேளை பேசாத விரதம் மேற்கொண்ட ஞாயிற்று நாளாகவே இருந்தது. இதனை தெரிந்து கொண்ட அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவரே அந்த கடமைக்கு பொருத்தமானவர் என தெரிந்துகொண்டு கடமையின் பொறுப்புக்களை கையளித்தார்.

இன்முகத்துடன் அனைவரையும் வரவேற்கும் பண்பு அவர்பக்கம் எல்லோரையும் ஈர்த்தது. அமரர் சிவபாலன் ஒரு சித்த புருஷனாக வெள்ளை வேட்டியுடன் வெள்ளை சால்வையும் அணிந்து வெள்ளை உள்ளத்துடன் பழகுவதால் துர்க்காபுரத் திற்கு வரும் வெளிநாட்டு சைவத்தமிழ் மக்களின் அன்புக்கும் பெருமதிப்புக்கும் பாத்திரமாகினார். ஆலயத்திற்கு வரும் பிரமுகர்களும் அரசியல்வாதிகளும் தம்பி சிவபாலன் எங்கே என்று கேட்டு உரிமை பாராட்டி பழகி வந்துள்ளனர்.

அமரர் சிவபாலன் மட்டுவிலில் உள்ள தனக்கு சொந்தமான நிலத்தில் ஒரு பகுதியை தென்மராட்சி பிரதேச செயலக கிராம சேவையாளர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் காரியாலயங்கள் அமைக்க வழங்கியுள்ளார். மீதமுள்ள நிலத்தில் நூல் நிலையம் ஒன்றை அமைத்து நடத்துவதற்கு கட்டடம் அமைக்கும் பணியை மேற்கொண்டிருந்தார்.

ஆனால் அப்பணி பூர்த்தியாக முன்பு அவர் அமரத்துவம் அடைந்து விட்டார். சிறு வயது முதல் இறை பக்தியும் தமிழ் பற்றும் கொண்டு தூய வாழ்க்கை வாழ்ந்தவரே இவர். அதனாலேயே இவர் அமரத்துவம் அடைந்தும் எம் மனங்களில் இன்றும் என்றும் வாழ்வார்.

நாச்சியார் செல்வநாயகம்
முன்னாள் முதுநிலை
விரிவுரையாளர், தலைவர்
இந்து நாகரிகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# சில புகையிரத சேவைகளில் மாற்றம்

(கொழும்பு)

எதிர்வரும் 27ஆம் திகதியிலிருந்து வடக்கு மற்றும் கடலோரப் புகையிரத சேவைகளில் மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்தது.

அதன்படி, காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு-கோட்டை வரை பயணிக்கும் தபால் புகையிரதம் மாலை 6 மணியளவில், காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் என்று புகையிரத திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், பெலியத்த-மருதானை செல்லும் சீயுகாமி அதிவேக புகையிரதமானது திருத்தப்பட்ட அட்டவணையின் படி காலை 6.15 மணியளவில் பெலியத்தயிலிருந்து புறப்படும்.

பின்னர் குறித்த புகையிரதமானது மருதானையிலிருந்து பிற்பகல் 3 மணியளவில் மீண்டும் பெலியத்த நோக்கிப் புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இதுவரை பிற்பகல் 2.15 மணியளவில் பெலியத்தவில் இருந்து மருதானை நோக்கிப் பிற்பகல் 2.15 மணியளவில் புறப்பட்ட காலி குமாரி புகையிரதமானது, திருத்தப்பட்ட அட்டவணையின் படி பிற்பகல் 1.35 மணியளவில் புறப்படவுள்ளதாகவும் புகையிரதத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1888

### டவனியா

ஏங்க உங்களுக்கெல்லாம் நாகரிகமே தெரியாதா... பல மணி நேரமா பேசுறேன் கொட்டாவி விட்டுக்கிட்டு இருக்கீங்க...



லூசாடி நீ... ஒன்னும் கொட்டாவி விடல, உன்கிட்ட ஏதாவது சொல்லனும்னு வாய தொறந்தா, எங்க நீ பேச விடுற...

### டருஷா

முப்பது வயதுக்கு மேல் பெண்களுக்கு சுடிதாரை தடை செய்ய வேண்டும்.
யாரு பாட்டி யாரு பேத்தினு தெரியல....



### மல்லிகா

கணவன்:
செல்லம் நேத்து எனக்கு ஒரு விபத்து நடந்துடுச்சி... ரொம்ப அடி பட்டுடுச்சி... மீரா தான் என்ன கொஸ்பிட்டல்ல சேத்தாங்க... டாக்டர் செக் பண்ணிட்டு முகத்தில ரொம்ப டமேஜ்னு சொல்றார். இடது கை உடஞ்சிருச்சாம்.. ஒரு கால எடுத்துடனும்னு சொல்றார்.. பயமா இருக்கு கொஞ்சம் சீக்கிரமா கொஸ்பிட்டலுக்கு வரியா...
மனைவி:
அது சரி... யார் அந்த மீரா?

### நிறோசா

குடித்துவிட்டு வந்த கணவன் தனது மனைவியின் திட்டை சமாளிக்க மடிக்கணனியை எடுத்துக்கொண்டு வேலை செய்ய துவங்கினார்...!
மனைவி:- குடிச்சீங்களா?
கணவன்:- இல்லம்மா!
மனைவி:- "குடிகார சனியனே" அப்புறம் ஏன் சூட்கேசை தொறந்து வெச்சு டைப் பண்ற...!

### ரஜினி

எல்லோருக்கும் வெள்ளை மாப்புள வேனும்னா நாங்க எங்கடி போறது.
கறுப்பும் கலையுமா வாட்ட சாட்டமா இருக்கும் வேர்ஜின் பசங்க பாவம் உங்கள சும்மா விடாதுடி சும்மா விடாது.



### சின்னா

சூரியன் பகவானே Setting ல போய் கொஞ்ச Brightness குறைக்க முடியுமா? தாங்க முடியல ப்ளீஸ்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2019-16.12.2019



விகாரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தின் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே சந்திரனும் ராகுவும் வீற்றிருக்கிறார்கள். உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் குரு பகவான் வீற்றிருந்து குரு-சந்திர யோகத்தை உருவாக்குகிறார். அருள்தரும் குருவின் பார்வை இராசியில் பதிவதால் பொருள் வளமும் சிறப்பாக இருக்கும். புதிய திருப்பங்களும் ஏற்படும். 'குரு பார்க்கக் கோடி நன்மை' என்பதால் இந்த மாதம் உங்களுக்குத் தடைகள் அகன்று தனவரவு பெருகும்.

கடைதிறப்பு விழா, கட்டடத் திறப்புவிழா, கல்யாண சுபகாரியங்கள் போன்றவை நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். உங்கள் ஆலோசனைகளைக் கேட்டு வெற்றி பெற்ற நண்பர்களும் உறவினர்களும் உங்களுக்கு புகழாரம் சூட்டுவர்.

புதுப்பொலிவுடன் வாழ்க்கையைத் தொடங்குவீர்கள். அடிப்படை வசதிகள் பெருகும். ஆதரவு தருவதற்கு மாற்றினத்தவர்கள் முன்வருவர். புதிய தொழில் தொடங்க வேண்டுமென்று நினைத்தவர்களுக்கு இதுவரை கிடைக்காத சலுகைகளும் உதவிகளும் இப்பொழுது கிடைக்கப் போகிறது. அதைக் கொண்டு புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

கடந்த ஓராண்டு காலமாக குரு 6 இல் இருந்தபொழுது மனக்கிலேசமும் தொழிலில் மந்த நிலையும் இருந்திருக்கலாம். இனி அந்த நிலை மாறும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். புதிய சேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து மகிழ்வீர்கள். குரு-சந்திர யோகம் இருப்பதால் புகழ், கீர்த்தி பெருகும். நடக்கும் தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து மேலும் மூலதனம் போட ஒத்துக்கொள்வர். எனவே இம்மாதம் தொழில் வெற்றி நடைபோடும். பெரியோர்களின் ஆலோசனைப்படி நடப்பதன் மூலம் அதிக நன்மைகளை நீங்கள் காணலாம்.

மாதம் தொடங்கும் பொழுதே சுக்கிரனும் செவ்வாயும் பரிவர்த்தனை யோகம் பெறுகின்றன. எனவே இடம், பூமி வாங்குவது சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். கடன் சுமை பாதிக்குமேல் குறையும். இதுவரை உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காமலிருந்த உங்களுக்கு, இப்பொழுது நற்பலன்கள் நடைபெறப் போகிறது. குருபலம் உங்கள் இராசிக்கு 6 இல் இருப்பதால் அரசு வழித் தொல்லைக்கு ஆளாக நேரிடும். கணக்கு வழக்குகளை கச்சிதமாக வைத்துக் கொள்ளுங்கள். எதைச் செய்தாலும் குடும்பப் பெரியவர்களைக் கலந்து ஆலோசித்துச் செய்தால், எந்தப் பிரச்சினைகளும் குறுக்கீடாக வராது. சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டுவது நல்லது.

இம்மாதம் திருக்கார்த்திகைத் திருவிழா வருகிறது. எனவே அன்றைய தினம் முருகப் பெருமானை உள்ளன்போடு வழிபட்டால் எந்த நாளையும் இனிய நாளாக அமைத்துக் கொள்ளலாம்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு பஞ்சம விரயாதிபதியான சுக்கிரன், நவம்பர் 22 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார். பிள்ளைகள் வழியில் ஏதேனும் ஒருவகையில் விரயங்கள் ஏற்படலாம். கல்வி சம்பந்தமாகவோ, பணி காரணமாகவோ வெளிநாடு செல்லும் நிலை உருவாகும். நூதனப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




நுண்ணறிவாளர்களின் சேர்க்கை உண்டு. இதுபோன்ற காலங்களில் குருவோடு, சுக்கிரன் இணைவதால் நல்ல மாற்றங்கள் திடீர், திடீரென வந்துகொண்டேயிருக்கும். வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வதில் தவறில்லை. என்றாலும் குடும்ப உறுப்பினர்களை கலந்து ஆலோசித்து முடிவெடுங்கள்.

விருச்சிக புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன், டிசெம்பர் 3 ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செல்கிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகவே அமையும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர்.

மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை நீங்களே முன்னின்று நடத்துவீர்கள். கட்டிய வீட்டைப் பழுதுபார்க்க வேண்டும் அல்லது புதிதாக வீடு கட்ட வேண்டும் என்று யோசிப்பவர்களுக்கு சரியான நேரம் இது. பொதுவாக பூமி சேர்க்கைக்கு பொருத்தமான நேரமாக இருப்பதால் விவசாயத் துறையிலும் ஒரு சிலர் ஆர்வம் காட்டுவர்.

உத்தியோகத்தில் ஒருசிலருக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். எந்தப் பிரச்சினையையும் சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றல் உங்களிடம் இருப்பதால் பலரும் உங்களிடம் ஆலோசனை கேட்க முன்வருவர். இம்மாதம் நின்ற கோலத்துப் பெருமாளையும், லட்சுமியையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அனைத்து வழிகளிலும் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். கணவன் - மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். பாதியில் நின்ற பணிகள் இனி ஒவ்வொன்றாக நடைபெறும். உடன்பிறப்புகளும் உறவினர்களும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பெற்றோர் மற்றும் சகோதரர்களின் ஆதரவு திருப்தி தரும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாகும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு சலுகைகள் கிடைக்கும். சக பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். சப்தம ஸ்தானத்தில் சனியின் ஆதிக்கம் இருப்பதால் உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

## தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் ராகுவோடு இணைந்து 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருவினுடைய அருட்பார்வை உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. வாக்கு, தனம், குடும்பம் என்னும் 2 ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவதால் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

உங்களுடைய இராசிக்கு 5 ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாயும், 4 ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்கிரனும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றனர். இதனால் பாக்கிய ஸ்தானம் பலமடைகிறது. எனவே சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பான மாதமாக இந்த மாதம் அமையும். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். பல திருப்பங்களைக் காணப்போகிறீர்கள். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து வளர்ச்சிக்கு வழிகாட்டுவர். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். படித்து வேலை வாய்ப்பிற்காக காத்திருக்கும் பிள்ளைகளாக இருந்தால் உடடினயாக வேலை வாய்ப்பும் கிடைத்து உதிரி வருமானங்கள் வர வாய்ப்புண்டு. ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். இறைவழிபாட்டில் நம்பிக்கை அதிகம் செலுத்தும் பொழுது தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறும். உடல் ஆரோக்கியத்தில் வந்த உஷ்ணாதிக்க நோய்கள் குறையும்.

6 இல் உள்ள சனி மற்றும் கேதுவோடு தற்சமயம் குருவும் சேர்ந்து சஞ்சரிப்பதால் எதிரிகள் விலகுவர். இலாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொண்டு, அமைதியான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக்கொள்வீர்கள். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் வரலாம். உங்கள் திறமைக்கு மேலிடம் மதிப்பு கொடுக்கும். திடீரென மற்றவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் தலைமைப் பதவிகளும் வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக் கும் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

இம்மாதம் ராகு-கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால், சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்து வந்தால், எடுக்கும் முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். வெள்ளிக் கிழமை தோறும் வடக்கு நோக்கிய விநாயகப் பெருமானை வழிபாடு செய்வது நல்லது.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

இதுவரை விருச்சிக இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், நவம்பர் 22 ஆம் திகதி தனுசு இராசிக்கு செல்கின்றார். இது ஒரு யோகமான நேரம்தான். அசுர குருவோடு தேவ குரு இணையும் பொழுது எதிர்பார்ப்புகள் நிறைவேற மாற்று இனத்தவரின் ஒத்துழைப்பு கிடைக்கும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் திருப்திகரமாக நடைபெறும். அவர்களின் எதிர்கால நலன் கருதி வங்கிகளில் வைப்பு நிதி வைப்பீர்கள். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதி என்பதால், புதிய வாகனம் வாங்கும்




முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வாகனத்திற்குரிய எண்களை அமைக்கும் பொழுது, உங்களுக்குரிய அதிர்ஷ்ட எண்களின் ஆதிக்கத்தில் ஏறுவரிசை அடிப்படையில் தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது.

விருச்சிக புதன் சஞ்சாரம்

துலாம் இராசியில் சஞ்சரித்து வந்த புதன், டிசெம்பர் 3 ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செல்கிறார். பாக்கிய ஸ்தான்த்தில் புதன் சஞ்சரிக்கப் போவதால் உறவினர்களின் ஒத்துழைப்புடன் இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும். சகோதரர்கள் பகை மறந்து செயற்படுவர். மாமன்காரகன் என்று புதனை அழைப்பது வழக்கம். அந்த அடிப்படையில் மாமன், மைத்துனர் வழியில் ஆதாயம் உண்டு. வெளிநாட்டில் இருந்தும் பணிபுரிய அழைப்புகள் தேடிவரும். வெளிமாநிலங்களுக்குச் சென்று பணிபுரியவும் வேலைவாய்ப்பு அமையும். பொதுவாக புதனின் சஞ்சாரம் திருப்திகரமாகவே இருக்கிறது. இம்மாதம் திருக்கார்த்திகைத் திருநாளில் வடிவேலனை வழிபட்டால் வளர்ச்சி கூடும்.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் உங்களுக்கு நன்மைகள் அதிகம் நடைபெறும் மாதமாகும். வீடு மாற்றம், இடமாற்றம், விரும்பத்தக்க விதத்தில் அமையும். கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பொருளாதாரத்தில் நிறைவு காண்பீர்கள். பிள்ளைகளுக்காக எடுத்த முயற்சியில் வெற்றி உண்டு.

தாய் வழி ஆதரவு திருப்தி தரும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த இலாகா மாற்றங்களோ, இடமாற்றங்களோ கிடைக்கலாம்.

சம்பளப் பாக்கிகள் வந்து சந்தோசப்படுத்தலாம். பௌர்ணமி வழிபாடும், தென்முகக் கடவுள் வழிபாடும் பலன்களை அதிகம் வழங்கும். திருக்கார்த்திகை அன்று முருகப்பெருமானை வழிபடுவது நல்லது.

## செல்வாக்கு அதிகரிக்கும் நேரம்

(தொடரும்)

## பழமொழிகள்


- வௌவாலுக்கு யார் தாம்பூலம் வைத்தார்கள்?
- வீட்டுக்கு செல்வம் மாடு, தோட்டச் செல்வம் முருங்கை.
- கனிந்த பழம் தானே விழும்.
- கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சந்நியாசி.
- தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி.
- நோய்க்கு இடம் கொடேல்.
- உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை.
- கேடு வரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே.
- கடல் திடலாகும் திடல் கடலாகும்.
- ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.
- அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்
- எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு உண்டு.
- இரவற் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறியாதே.
- கொள்ளிக்கு எதிர்போனாலும் வெள்ளிக்கு எதிர்போகலாது.
- வானம் சுரக்க, தானம் சிறக்கும்.

## இலங்கையின் முக்கிய நிலையங்கள்

- செய்மதி தகவல் தொடர்பு நிலையம் - பாதுக்கை
- புடைவைக் கைத்தொழில் நிலையம் - வியாங்கொடை, பூகொட துல்கிரிய
- எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் - சப்புகஸ்கந்த
- பிறிமா மாவு ஆலை - திருகோணமலை
- விவசாய ஆராய்ச்சி நிலையம் - மகாஇலுப்பள்ளம, இங்குராகொட, பதல்கொட
- தாவரவியல் பூங்காக்கள் - பேராதனை, கனோபத்த, ஹக்கல
- தேயிலை ஆராய்ச்சி நிலைய்யம் - தலவாக்கலை
- சோயா ஆராய்ச்சி  நிலையம் - பல்லேகலை, கண்ணொறுவ
- ரயர் (டயர், டியூப்) தொழிற்சாலை - களனி
- இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை
- வனவிலங்குச் சரணாலயம் - வில்பத்து, யால, உடவளவை, றுகுணு, லகுகல
- பருத்தி ஆராய்ச்சி நிலையம் - அம்பாந்தோட்டை
- உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - நுவரெலியா




# நட்டத்தை இலாபமாக்கிய குதிரை




தெனாலிராமன் ஒருமுறை சந்தைக்குச் சென்று ஐம்பது நாணயங்கள் கொடுத்து குதிரை ஒன்று வாங்கி வந்தான். அதில் ஏறி சவாரி செய்யப் பழகிக் கொண்டிருந்தான். ஒருநாள் அரசர் தன் விலை உயர்ந்த குதிரை மேல் ஏறிக் கொண்டு இராமனையும் உடன் வருமாறு அழைத்தார்.

தெனாலிராமனும் தன் குதிரை மீது ஏறிக் கொண்டு மன்னருடன் உலாவப் புறப்பட்டான். அரசரின் குதிரை அழகாக நடை போட இராமனின் குதிரையோ தளர்ந்த நடை போட்டது. கிருஷ்ணதேவ ராயர் இந்தக் குதிரையைப் பார்த்து கடகடவெனச் சிரித்தார். இராமனையும் கேலி செய்தார். "இராமா! போயும் போயும் இந்த வற்றிப் போன தொத்தல் குதிரை தானா உனக்குக் கிடைத்தது. இதனை வைத்துக் கொண்டு நீ எப்படி சவாரி செய்யப் போகிறாய்? என் குதிரையைப் பார். எப்படி ஓடுகிறது?" இராமனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விட்டது." அரசே! இந்தக் குதிரை பயன்படுவது போல உங்கள் குதிரை கூடப் பயன்படாது." என்று தன் குதிரையைப் பற்றி மிக உயர்வாகப் பேசினான். மன்னருக்குக் கோபம் வந்தது." என்ன இப்படிச் சொல்கிறாய்? இதை உன்னால் நிரூபிக்க முடியுமா?"

"வேண்டுமானால் பாருங்கள். உங்கள் குதிரையால் செய்ய முடியாததை என் குதிரையைச் செய்ய வைக்கிறேன்." "அப்படியா சொல்கிறாய்? நூறு பொன் பந்தயம் கட்டுகிறேன். செய் பார்க்கலாம்" என்று பேசியவாறு மெதுவாக வந்து கொண்டிருந்தனர் இருவரும். அப்போது குதிரைகள் இரண்டும் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தன. கீழே பார்த்தால் பயங்கர சுழல். ராமன் சட்டென்று குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். பாலத்தின் ஓரத்திற்குக் குதிரையைக் கொண்டு போனான். அரசர் திகைத்தார். ராமன் தன் குதிரையை "தொபுகடீர்" என்று நீருக்குள் தள்ளி விட்டு விட்டான். அரசர் பதறினார். "இராமா!, என்ன இது, ஏன் இப்படிச் செய்தாய்?" "அரசே! என் குதிரை செய்தது போல உங்கள் குதிரை செய்ய முடியுமா?" உங்கள் ஆயிரம் பொன் மதிப்புள்ள குதிரையால் செய்ய முடியாததை என் குதிரை செய்து விட்டது பாருங்கள்."

ஆயிரம் பொன் மதிப்புள்ள குதிரை மட்டுமல்ல, அரசரின் நண்பனாகவும் பழகிய அறிவுள்ள குதிரை அது. அதை இழக்க அரசர் விரும்புவாரா? பந்தயத்தில் சொன்னபடி நூறு பொன் நாணயங்களைக் கொடுத்தார் அரசர்." இருந்தாலும் ஒரு உயிரைக் கொல்வது தவறில்லையா இராமா?" என்றார் அரசர் வருத்தத்தோடு. "அரசே!, நோய்வாய்ப்பட்டு வயோதிப நிலையில் இருக்கும் இந்தக் குதிரையை யாரும் இனி வாங்க மாட்டார்கள்.

இது இறந்தால் எனக்கு ஐம்பது நாணயங்கள் நஷ்டம். இப்போது எனக்கு நூறு பொன் கிடைத்து விட்டது. அத்துடன் அந்தக் குதிரையைப் பராமரிக்கும் செலவும் குறைவு. குதிரைக்கும் துன்பம் நீங்கி விட்டது. எனவே தான் இப்படிச் செய்தேன். என் குதிரை யின் உயிர் நஷ்டம் எனக்கு இரு மடங்கு இலாபமாயிற்று" என்றான். மன்னரும் அதை ஒப்புக் கொண்டு தெனாலிராமனின் சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தார்.



ஜெ.பிரவீஸ், தரம் 02,
பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்.

## காந்தி

நாட்டில் வாழ்ந்தார் காந்தி
நமக்குத் தந்தார் சாந்தி
போட்டி யின்றி வாழப்
பொருந்தும் நெறியை ஈந்தார்

சாதி யில்லை என்றார்
சமயம் ஒன்றே என்றார்
நீதி யார்க்கும் ஒன்றே
என்று சொன்னார் நன்றே

அண்டி வந்து நாட்டை
அடக்கி வைத்த மாற்றான்
குண்டு பாய்ச்சம் போதும்
குன்று போல நின்றார்

சாயும் உரிமை காக்கச்
சமர் புரிந்த காந்தி
ஆயு தங்க ளில்லா
அகிம்சைப் போரில் வென்றார்

அவலம் போக்க வந்த
அறிஞர் காந்தி ஓர்நாள்
தவம் நிகழ்த்தும் போது
குண்டு பட்டு வீழ்ந்தார்.

ஒவ்வொரு நல்ல செயலும் நல்ல எண்ணமும் ஓர் அழகைஒளியைத் தருகிறது. - ரஸ்கின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்களிக்கும் முறையை விளங்கிச் செயற்படுங்கள்

நாளை ஜனாதிபதித் தேர்தல். தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

வாக்களிக்கின்ற உரிமை கொண்ட அனைத்து மக்களும் தங்கள் வாக்குரிமையை அளிக்க வேண்டுமெனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுவில் தேர்தலின்போது வாக்களிப்பு வீதம் உயர்வாக இருக்குமாயின் அது ஜனநாயகத்தைச் செழுமைப்படுத்தும்.

எனவே வாக்களிக்கின்ற தகைமையுடைய அனைவரும் நேர காலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமது வாக்குகளை அளிக்க வேண்டும்.

இறுதி நேரம் வரை காத்திருக்காமல் நேர காலத்தோடு வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிப்பதானது அனைத்து விடயங்களுக்கும் நன்மை தருவதாகும்.

அதேநேரம் அனைத்து மக்களும் தமது வாக்குகளை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே தேர்தல் பணிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

எனவே எமக்கு இருக்கக்கூடிய ஜனநாயக உரிமையை நாம் பயன்படுத்த வேண்டும். வாக்குரிமை என்பது எமக்கான உரிமை.

அந்த உரிமையை செம்மையாகப் பயன்படுத்துவது முக்கியமானது என்பது ஒரு விடயம்.

மற்றையது இன்னும் முக்கியமானது. அதாவது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற் காகவும் ஜனநாயகத்தின் அடிப்படையில் மக்கள் தமது வாக்குகளை வழங்கி உரியவரைத் தெரிந்தெடுப்பதிலும் செல்லுபடியற்ற வாக்குகள் கணிசமாகக் குறைய வேண்டும்.

அதாவது அளிக்கப்பட்ட வாக்குகளில் செல்லுபடியற்ற வாக்குகளின் அளவு பூச்சியம் என்பதாக இருக்கும்போதுதான் ஜனநாயகம் உரியவாறு விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது என்பது உறுதியாகும்.

ஆனாலும் எங்கள் நாட்டில் செல்லுபடியற்ற வாக்குகள் என்ற விடயம் தொடர்ந்தும் பேசுபடுபொருளாகவே இருக்கிறது. இவ்வாறான நிலைமை ஏற்புடையதன்று.

எனவே வாக்களிக்கின்ற ஒவ்வொருவரும் வாக்களிக்கும் முறையைத் தெளிவாக விளங்கிக் கொண்டு செயற்படுவது மிகவும் அவசியமாகும்.

உண்மையில் வாக்களிக்கும் முறையை சரியாக விளங்கிக் கொள்ளாமல், செயற்படுகின்றபோதுதான் செல்லுபடியற்ற வாக்குகள் என்ற விடயம் முன்னெழுகிறது.

எனவே அன்புக்குரிய வாக்காளப் பெருமக்கள் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்ற அடிப்படையை விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும்.

இதுதவிர இம்முறை அதிக வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால், வாக்குச்சீட்டு இரண்டு அடி நீளம் கடந்தது எனக் கூறப்படுகிறது.

எனவே இதனையும் தெரிந்து கொண்டு நிதானமாக வாக்களிக்கும்போது செல்லுபடியற்ற வாக்குகள் கணிசமாகக் குறைவடையும்.

# அமைச்சரவை முடிவுகளை ஊடகங்களுக்கு வழங்கவேண்டாம்

## அரச தகவல் திணைக்களத்திற்கு அமைச்சரவை செயலகம் அறிவிப்பு

அமைச்சரவையின் முடிவுகளை ஊடகங்களுக்கு வழங்க வேண்டாம் என அமைச்சரவை செயலகம் அரச தகவல் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

இதற்கு முன்னர் அமைச்சரவைக் கூட்டம் நடந்த பின்னர் மறுநாள் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளை அரச தகவல் திணைக்களம் ஊடகங்களுக்கு வழங்கும்.

எனினும் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஊடகங்களுக்கு வழங்கப்பட மாட்டாது என அரச தகவல் திணைக்களம் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளது.

உயர் மட்ட அரசியல்வாதி ஒருவர் அமைச்சரவை செயலகத்திற்கு வழங்கிய உத்தரவே இதற்கு காரணம் என கூறப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்ட இறுதி அமைச்சரவைக் கூட்டம் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வவுனியா ஏ9 வீதியில் விபத்து பெண் ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஏ9 வீதி சோயா வீதிக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் பெண்மணி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்மணி வவுனியா நகரில் அமைந்துள்ள ஆலயத்திற்குச் சென்றுவிட்டு சோயா வீதியில் அமைந்துள்ள அவரது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இந்நிலையில் ஏ9 பிரதான வீதியில் பயணித்த அவர் உரிய முறையில் சமிக்ஞை விளக்குகளை பயன்படுத்தி சிறுவீதியூடாக திரும்ப முற்பட்டுள்ளார். இதன்போது அதே திசையில் வவுனியாவில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி வேகமாக பயணித்த தனியார் பேருந்து அவரை மோதியுள்ளது. இதனால் தூக்கி வீசப்பட்ட பெண்மணி படுகாயங்களிற்குள்ளானார்.

விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் சாரதி சில நிமிடங்கள் அப்பகுதியில் நின்றுவிட்டு பேருந்துடன் அப்பகுதியில் இருந்து அகன்று சென்றுள்ளார். இந்நிலையில் வீதியால் பயணித்த சிலர் படுகாயமடைந்த பெண்மணியினை வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர். (ம-3,299)

## இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் உள்ள விசேட அம்சங்கள்

(கொழும்பு)

இலங்கையில் முதன்முறையாக பதவியிலிருக்கும் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், சபாநாயகர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆகியோர் போட்டியிடாத முதலாவது தேர்தலாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் அமையவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

எனவே அரச அதிகாரத்தில் இருக்கின்றவர்களும், ஏற்கனவே அதிகாரத்தில் இருந்தவர்களும் இம்முறை தேர்தலில் களமிறங்கவில்லை என்பதால் இலங்கை வரலாற்றில் இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் விசேடமான அம்சமாகும்.

இது வரையில் இடம்பெற்றுள்ள தேர்தல்களில் பதவியிலிருக்கும் ஜனாதிபதி, பிரதமர் , எதிர்க்கட்சி தலைவர் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் என யாரேனுமொருவர் களமிறங்கியுள்ளார். இவர்களே நாட்டின் பிரதான அரசியல் தலைவர்களாகவும் கருதப் படுகின்றனர்.

இவ்வாறு பிரதான தலைவர்கள் களமிறங்காத முதலாவது தேர்தலாக இந்த தேர்தல் அமைகின்றமை விசேட அம்சமாகும். (ம-3)

## அச்சமின்றி விரும்பியவருக்கு வாக்களிக்கலாம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுதந்திரமாகவும், நடுநிலையான தேர்தலை நடாத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும், ஆகவே மக்கள் அச்சமின்றி தாம் விரும்பிய நபருக்கு வாக்களிக்க முடியுமென்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான என். வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "யாழ்.மாவட்டத்தில் தேர்தலிற்கான பாதுகாப்பு மற்றும் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தில் 4 லட்சத்து 75 ஆயிரத்து 126 வாக்காளர்கள் பதிவு செய்துள்ளார்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் 89 ஆயிரத்து 538 வாக்காளர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் 531 வாக்களிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 100 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் 631 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தீவகப் பகுதியில் 9 வாக்களிப்பு நிலையங்கள் உள்ளன. 71 வலயங்களாக பிரிக்கப்பட்டு அதற்குரிய தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தான் வாக்கெண்ணும் பணிகள் மற்றும் வாக்குப் பெட்டிகள் அனைத்தும் விநியோகம் செய்யப்படவுள்ளன. 33 வாக்கெண்ணும் நிலையங்களும், 11 தபால் மூல வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் கடமைக்காக 7200 அரச உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இம்முறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேர்தல் குற்றங்களாக 40 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதில், அனைத்து முறைப்பாடுகளுக்கும் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்றதைப் போன்று இம்முறையும், சுமூகமான முறையில் சுதந்திரமாகவும், நடுநிலையாகவும் தேர்தல் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாக்குச் சீட்டுக்கள் நீளமாக இருப்பதனால், வாக்களிப்பு நேரம் அதிகமாகும் என்ற காரணத்தினால், வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேலதிகமாக வாக்குப்பெட்டிகளும் வாக்களிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தாமதங்கள் ஏற்படாதவாறு வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிக்க முடியும். இன்று காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து வாக்குப் பெட்டிகள், வாக்களிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும்" என தெரிவித்தார். (ம-3)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

கிளி வளர்த்தேன் பறந்து விட்டது. அணில் வளர்த்தேன் ஓடி விட்டது. மரம் வளர்த்தேன் இரண்டும் திரும்பி வந்து விட்டது. - அப்துல் கலாம்

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நல்லவர்களைத் தேர்ந்தெடுத்துப் பழகுங்கள். வாழ்வில் முன்னேறுவதற்கு இது தான் சிறந்த வழி. - வாரியார் சுவாமிகள்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ஆன்மீகம் தான் வளர்ச்சிக்கு ஆணிவேர். ஆன்மிகம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.
- வாழ்வில் எதைக் கைவிட்டாலும் மன உறுதியை மட்டும் கைவிடுவது கூடாது.
- கோபத்தில் மனிதனால் சிறப்பாக பணியாற்ற முடியாது. ஆனால், அமைதியில் மனித ஆற்றல் வீணாவதில்லை.
- பெற்றுக் கொள்வதில் பெருமை உண்டாவதில்லை. கொடுப்பவனே பேறு பெற்றவன்.
- தவறுகளை நினைத்து வருந்தாதீர். அவை நமக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருக்கின்றன.

# றொசானின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க மகாஜனக் கல்லூரி இனிங்ஸில் முன்னிலை



இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் முதலாம் சுற்று ஆட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி முன்னிலையில் உள்ளது.

இலங்கை பாடசாலைகள் சங்கம் நடத்தும் 13 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான கிரிக்கெட் தொடரில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 38.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 88 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

அவ்வணி சார்பில் சாருஜேஸ் 17, சிவதன் 14 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி சார்பில் யோவெல் றொசான் 3, வொசிந்தன் 3, துளசிகன் 2, ரகசிஜன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தெல் லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி 42.1 பந்துப் பரிமாற்றத்தின் போது 4 இலக்குகளை இழந்து 102 ஓட்டங்களை பெற்ற நிலையில் தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. யோவெல் றொசான் 52, ரகசிஜன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி சார்பில் மதுசன் 3 இலக்குகளை கைப்பற்றினார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 21 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களை பெற்ற போது ஆட்ட நேரம் நிறைவடைந்தது. (க)

# வென்றது செரண்டீப் அணி



நடப்பாண்டிற்கான FA கிண்ண தொடரில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென்.மேரீஸ் அணியை எதிர்த்து மாவனெல்லை செரண்டீப் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்களை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என செரண்டீப் அணி வெற்றி பெற்றது.

சென்.மேரீஸ் அணி சார்பாக டிக்னிசன் 02 கோல்களை பெற்றுக் கொடுத்தார். செரண்டீப் அணியில் வடக்கினை சேர்ந்த அமலராஜ் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# பிரிவு 02 அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் வென்றது யூனியன் அணி



பிரிவு 02 உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மருதநிலா அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல் கணக்கில் யூனியன் அணி வெற்றி பெற்றது.

யூனியன் அணி சார்பாக தனுஜன் 02 , கிரியோன் , மதி ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (க)

# கற்பகச்சமர் வெற்றிக்கிண்ணம்; குருநகர் பாடும்மீன் அணி வசம்



கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீபர் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல்கணக்கில பாடும்மீன் அணி வெற்றி பெற்று சம்பியனானது. பாடும்மீன் அணி சார்பாக சாந்தன், விசோத் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி



பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்று போட்டியில் இறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 07:06 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக வர்மனும் , சிறந்த கோல் காப்பாளராக கீர்த்தனன் , சிறந்த பின்கள வீரராக கௌதமன் அதிக கோல்களை பெற்ற வீரராக ஆர்த்திகன், வளர்ந்து வரும் வீரராக அலெக்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# மூன்றாம் இடத்தை தனதாக்கியது இமையாணன் மத்தி அணி



பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் இமையாணன் மத்தி அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல்கணக்கில் இமையாணன்மத்தி அணி வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சுபாஸ் தெரிவு செய்யப்பட்டார். (க)

## மகிந்த தேசப்பிரியவை பதவி...

மூல வாக்களிப்பில் ஈடுபடுபவர்களின் பெயர், விபரங்கள் தனிச் சிங்கள மொழியில் வழங்கப்பட்டது. இதனை தமிழ் மொழியில் தருமாறு கோரியிருந்தபோதும் அந்த பெயர், விபரங்கள் தமிழ் மொழியில் வழங்கப்படவில்லை.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவை பதவி விலகுமாறு கோரியே அவர் உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்திருந்தார்.

அவர் போராட்டத்தினை ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே யாழ். மாவட்ட தேர்தல்கள் அலுவலக அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஜனாதிபதித் தேர்...

தும்மல சூரிய, வீரகொடியான பிரதேசத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உந்துருளி ஒன்றில் அவர் தேர்தல் பிரசார பிரசுரங்களை விநியோகித்து சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த செப்டெம்பர் மாதம் 29ஆம் திகதி முதல் நேற்று அதிகாலை 6.00 மணி வரையில், பொலிஸாருக்கு 105 தேர்தல் சார்ந்த முறைப்பாடுகள் கிடைக் கப்பெற்றுள்ளன.

அத்துடன் தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 111 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த காலப்பகுதியில் தேர்தல்கள் தொடர்பாக 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-3)

## வாக்குப்பெட்டி...

இதனைத் தெரிவித்துள்ளார்.

12 ஆயிரத்து 845 வாக்கு மத்திய நிலையங்களும், ஆயிரத்து 179 வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தும் அதிகாரிகள் உரிய இடங்களுக்கு இன்று சென்றடைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கிணற்றுக்குள்...

இச்சம்பவம் நீர்வேலி அச்செழு பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை வள்ளியம்மை (வயது 58) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை அன்று பிற்பகல் வீட்டு வளவில் இருந்த குப்பையை துப்புரவு செய்து கொண்டிருந்த போது வீட்டின் நிலமட்டத்துடன் காணப்பட்ட கிணற்றில் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## ஜனாதிபதித்...

கண்காணிப்பாளர்களும் இந்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

கொழும்பு, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை, திருகோணமலை, குருநாகல், புத்தளம், மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு இவர்கள் விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## துன்னாலையில்...

துன்னாலை கிழக்கு, முனியப்பர் கோவிலடிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து கசிப்பு பிடிப்பதற்காக இரண்டு பொலிஸார் அப்பகுதிக்கு சென்றுள்ளனர்.

கசிப்பு போத்தலையும், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவரையும் பொலிஸார் இருவரும் கைது செய்த நிலையில் பொலிஸார் இருவரையும் வீட்டில் இருந்து வெளியேற விடாமல் அப் பகுதியைச் சேர்ந்த சில பெண்கள் சிறைப்பிடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து இரண்டு பொலிஸாரும் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்ததையடுத்து மேலதிக பொலிஸார் அங்கு சென்று இரண்டு பொலிஸாரையும், கைது செய்யப்பட்ட நபரையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு சூழ்நிலை காணப்பட்டது. (ம-3,60)

## தேர்தலுக்கு...

றும் குறிப்பிட்டுள்ளது.

பெரிய கூட்டங்கள் அல்லது ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடங்களுக்கு அருகில் இருப்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் சுற்றுலா தளங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பொது இடங்களுக்குச் செல்லும்போது அவதானமாக இருக்குமாறும் தூதரகம் கேட்டுக் கொண்டுள்ளது.

அத்தோடு உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் உள்நாட்டு ஊடகங்களை கண்காணித்து, புதிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை செய்யுமாறும் கேட்டுக் கொண்டுள்ளது. (ம-3)

## மோட்டார் சைக்...

இவர் தனியார் பாதுகாப்பு உதவி ஆய்வாளராக கடமையாற்றுகின்றார்.

இவ் விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதவான் திடீர் மரண விசாரணை அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு பணித்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் உடற்கூற்று பரிசோதனை நடத்திய பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-3,29,30)

# தூய்மையான நிர்வாகத்திற்கு மைத்திரி எடுத்துக்காட்டு

### ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளை ஒழிப்பதற்கான நேரடி தீர்மானங்களை மேற்கொண்டு கடந்த அரசாங்கத்திலும் தற்போதைய அரசாங்கத்திலும் இடம்பெற்ற ஊழல், மோசடிகளை கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்து தூய்மையான அரச நிர்வாகம் என்பதை நடைமுறை ரீதியில் எடுத்துரைத்தவர் தற்போதைய ஜனாதிபதியே ஆவார் என ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன தெரிவித்தார்.

கடந்த ஐந்து வருட காலமாக ஜனாதிபதி ஆற்றிய செயற்பணிகளை பாராட்டும் வகையில் ஜனாதிபதியின் பணிக்குழாமினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றபோதே ஜனாதிபதியின் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்களின் நலனுக்காக பெருமளவு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர் தற்போதைய ஜனாதிபதி என்வும், அதன் நன்மைகள் இன்று இந்த நாட்டின் அனைத்து கிராமங்களிலும் நகரங்களிலு முள்ள மக்கள் அமைதியாக அனு பவித்து வருகின்றார்கள் எனவும் உதய ஆர்.செனெவிரத்ன தெரிவித்தார். (ம-3)

## நாடுமுழு...

அத்துடன் அதிகாரிகள் குறைவாகவுள்ள பகுதிகளுக்கு அதிகாரிகளை அனுப்பவும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை முதல் நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கிலும் வாக்களிப்பு நிலையங்களில் பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## இம்முறை தேர்தல் வன்முறை...

யிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது 4 கொலைச் சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன.

எனினும், இம்முறை அவ்வாறு கொலைச் சம்பவங்களோ அல்லது பாரிய வன்முறைகளோ பதிவாகவில்லை.

கொலை, கூரிய ஆயுதத்தினால் காயப்படுத்தல், தாக்குதல், கடத்தல், குண்டு வெடிப்பு, துப்பாக்கிச்சூடு, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல், சொத்துக்களை சேதப்படுத்தல் மற்றும் அரசியல் கட்சி, காரியாலயங்களை சேதப்படுத்தல் போன்ற பாரிய வன்முறை சம்பவங்கள் இம்முறை குறைவடைந்துள்ளன.

மேற்கூறிய குற்றங்களுடன் தொடர்புடைய சம்பவங்கள் 2010ஆம் ஆண்டில் 502, 2015ஆம் ஆண்டில் 190, இவ்வருடம் 68 எனப் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## தேர்தலில் வாக்களிக்கும் போது...

இலக்கம் 1 அல்லது X அடையாளத்தை பதிவிடுமாறும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வாக்குசீட்டில் 1 மற்றும் X ஆகிய இரண்டு அடையாளங்களை அடையாளமிட்டால் அந்த வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வாக்காளர் தங்கள் விருப்பமான வாக்குகளை அளிக்க விரும்பினால், இலக்கம் ஒன்றின் ஊடாக வாக்களிக்க முடியும்.

விருப்பு வாக்குகளை பயன்படுத்த 2ஆம் மற்றும் 3ஆம் இலக்கங்களை பயன்படுத்தி வாக்களிக்க முடியும்.

இரண்டு அடையாளங்களையும் பயன்படுத்தினால் வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## சு.க தலைவர் மைத்திரியே...

பால சிறிசேன செயற்படுவார் என பதில் தலைவர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர்களில் பெரும்பான்மையானோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்க கூடாதென அழுத்தம் பிரயோகித்தனர்.

சுதந்திர கட்சியில் பலர் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்தமையினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானித்தார்.

அதற்கமைய தேர்தல் முடியும் வரை சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்தார்.

அதற்கமைய ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி தயாராகி வருவதாக பதில் தலைவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் இருந்து ஜனாதிபதியினால் எதிர்வரும் காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 792
வர்ணம் : நிலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.11.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 64,346,985/-
வெற்றி இலக்கங்கள் 12 20 49 52 W

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1075
சீட்டிழுப்பு திகதி 14.11.2019 வியாழக்கிழமை
D 08 24 47 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,905,704

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1621 சீட்டிழுப்பு திகதி 14/11/2019
வெற்றி இலக்கங்கள் 35 38 58 62 J
ரூ. 40,926,312

ராசி அதிர்ஷ்டம்
திகதி 14/11/2019 வெற்றி வாரம் 2678 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் மீனம் 03 08 31 52
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,621,274
வெற்றி பெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1569 திகதி 2019/11/14
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 28 41 43 69

மஹஜன சம்பத
திகதி 2019/11/14
சீட்டிழுப்பு இலக்கம் 4049
H 5 3 2 7 9 8

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 14-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2301
W 05 24 49 69

நீரோகா
திகதி 2019/11/14
சீட்டிழுப்பு இலக்கம் 624
லக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 17 48 52 62

# ராஜித சேனாரத்னவுக்கு எதிராக நீதிமன்றில் மனுத் தாக்கல்

அமைச்சர் ராஜித சேனாரத்தனவிற்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் நேற்று சட்டத்தரணி ஜனஜித் டி சில்வாவினால் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளைவான் கடத்தல்கள் தொடர்பாக அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இருந்தார்.

இதில் கடத்தல்களுக்காக வெள்ளை வானை செலுத்தியதாக கூறப்படும் சாரதி ஒருவரும் கடத்தலுக்கு உள்ளான ஒருவரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தநிலையில், கடத்தல்களுடன் தொடர்புடைய ஒருவர் தலைமறைவாக இருப்பதற்கு உதவியளித்ததாக, அமைச்சர் ராஜித மீது குற்றம் சுமத்தி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், சட்டத்தரணி ஜனஜித் டி சில்வா, கடந்த 11ம் திகதி இதுதொடர்பாக அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்திருந்தார். (ம-3)


கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
IELTS வகுப்புகளும் நடைபெறுகின்றன
UnLimmited Hours Classes
03/06 Months classes
எமது விசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில்
கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
WORLD EDUCATION CONSULTANCY
புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
மற்றும் சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

FRANCE
Student Visa
No IELTS
0760579999
(C-8192)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(C-8109)





விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-7115)
0768226240
V2 TRAVELS




## சாவகச்சேரி நகர சபையின்

# கோழி இறைச்சிக் கடைக்கு 14 நாட்களுக்கு சீல் வைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின்கோழி இறைச்சிக் கடையினை இன்று வெள்ளிக் கிழமையில் இருந்து 14 நாட்களுக்கு சீல் வைத்து மூடுவதற்கு நகர சபையினர் சபையில் தீர்மானித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே சபை உறுப்பினர்களால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்கு முன்னர் குறித்த நகர சபையின் இறைச்சிக் கடையில் பணியாற்றிய பணியாளர் ஒருவர் கடையில் வைத்து போதைப்பொருளுடன் மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இருப்பினும் குறித்த பணியாளர் பிணையில் வெளிவந்த பின்னரும் நகர சபையின் இறைச்சிக் கடையில் பணியாற்றி வருகிறார்.

இதனால் சாவகச்சேரி நகரசபையினர் குறித்த பணியாளரை இறைச்சிக் கடையில் இருந்து நீக்குமாறு இறைச்சிக் கடையை குத்தகைக்கு எடுத்த உரிமையாளருக்கு அறிவித்தல் விடுத்திருந்தனர்.

இருப்பினும் உரிமையாளர் நகரசபையின் உத்தரவுக்கு செவி சாய்க்காமையால் குறித்த இறைச்சிக் கடையை 14 தினங்களுக்கு சீல் வைத்து மூட தீர்மானித்துள்ளனர்.

இளம் சமுதாயத்தை சீர்கெடுக்கும் நோக்கில் இவ்வாறான சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3.30)

## மாலிக்குச் சென்ற

# இராணுவத்தினர் இலங்கை திரும்பினர்

மாலி நாட்டில் ஐக்கிய நாடுகள் அமைதிப் படையில் இணைந்து பணியாற்றிய இலங்கை இராணுவத்தினர் நேற்று மதியம் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கையில் இருந்து கடந்த 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி புறப்பட்டுச் சென்ற 176 பேர் கொண்ட படையினரே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

நாடு திரும்பிய இராணுவத்தினரை வரவேற்பதற்காக மேஜர் ஜெனரல் மகிந்த முதலிகே உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றிருந்தனர். (ம-3)


வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல புத்தகக்கடைக்கு அனுபவம் வாய்ந்த (ஆண், பெண்) வேலையாட்கள் தேவை.
தொடர்பு
0773992087
(975)





மதிப்பிற்குரிய **நியூ மைதிலி** வாடிக்கையாளர்களே! தங்களுக்கு மதிப்பளித்து நாங்கள் வழங்கும் 2020ஆம் ஆண்டுக்கான **நாட்காட்டியினை 01.12.2019** தொடக்கம் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த. சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## கணிதம் பகுதி II கொழும்பு றோயல் கல்லூரி

பகுதி -A, பகுதி-b இலிருந்து முறையே ஐந்து, ஐந்து வினாக்களுக்கு விடை தருக
(உருளையின் கனவளவு $\pi r^2 h$)


பகுதி A

1) a) இயந்திரங்களை இறக்குமதி செய்து விற்கும் N.S.P நிறுவனம் ஒரு இயந்திரத்திற்கு 25% சுங்கவரியாக அறவிடுகின்றது. வரி செலுத்திய பின்பு அதன் மதிப்பு ரூபா.250,000 ஆகும்.

(I) சுங்கவரி செலுத்துவதற்கு முன்பு இயந்திரத்தின் பெறுமதியை காண்க.
(II) நிறுவனமானது இயந்திரமொன்றிற்கு 12% இலாபம் வைத்து விலை குறிக்குமாயின். குறித்த விலையை காண்க.
(III) பண்டிகை காலத்தின் போது 3% கழிவு கொடுத்து விற்கப்படும். மேற்கூறிய இயந்திரத்தின் விற்பனை விலையை காண்க
(IV) இயந்திரத்தை மேலே கூறியவாறு விற்கும் போது நிறுவனம் பெற்ற இலாப சதவீதத்தை காண்க.


b) (I) சமீர் ஒரு நிறுவனமொன்றின் ரூ.25 பங்குகளை வாங்குவதற்கு ரூ.200,000 ஐ முதலீடு செய்கிறார். கம்பனியானது பங்கு ஒன்றிற்கு ரூ.5 ஐ பங்கு இலாபமாக வழங்குகின்றது. ஆண்டின் இறுதியில் கிடைக்கும் பங்கு இலாபத்தைக் காண்க.
(II) வருட முடிவில் பங்குகளை விற்பதன் மூலம் மூலதன இலாபமாக ரூ.120,000 பெறுவானாயின் பங்கு ஒன்றை விற்ற விலையைக் காண்க.

2) சார்பு $y=(x+l)(x-k)$ ஆனது x அச்சை P,Q வில் வெட்டுகின்றது. நேர் கோடானது சார்பை வெட்டுப்புள்ளி C ஆனது (-3,12) ஆகும்.




(I) k இன் பெறுமானத்தை காண்க.
(II) சார்பின் மூலங்களை காண்க
(III) சமச்சீர் கோட்டின் சமன்பாடு
(IV) சார்பின் இழிவுப் பெறுமானம்
(V) முக்கோணம் CPQ △ இன் பரப்பைக் காண்க.
(VI) சார்பின் சமன்பாட்டை $y=(x-a)^2-b$ எனும் வடிவில் தருக.

3) ஒரு செவ்வகத்தின் அகலம் X cm ஆகும். நீளமானது அகலத்தின் இரண்டு மடங்கிலும் 4 குறைவு, செவ்வகத்தின் பரப்பு $98cm^2$ எனின், செவ்வகத்தின் அகலத்தை இரு தசமதானங்களில் தருக. ($\sqrt{2}=1.414$)





4) ஒரு கடையில் புத்தகங்களை A,B என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

a) A புத்தகத்தின் விலை B புத்தகத்தின் விலையிலும் 15 ரூபா கூட. A,B இன் மொத்த விலை ரூ.165 ஆகும்.

I. இரு ஒழுங்கமை சமன்பாடுகளை அமைக்க.
II. புத்தகத்தின் விலைகளை தனித்தனியாக காண்க.
III. காரணிப்படுத்துக. $a^3-4a$
IV. சுருக்குக. $\frac{2}{(a-5)^2}$ $\frac{3}{(5-a)}$

5) a) 2 a பக்கமுடைய ஒரு சதுரமுகியை உருக்கி a விட்டமும் / உயரமும் உடைய ஒரு உருளை தயாரிக்கப்படின் உருளையின் நீளம் $l=\frac{32a}{\pi}$ எனக் காட்டுக.




$a=(\sqrt{0.0027} \times 2.5^2)$cm, $\pi = 3.14$ எனக் கொண்டு மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி l இன் பெறுமானத்தைக் காண்க.

6) தரப்பட்ட அட்டவணையானது மாதமொன்றில் செங்கற்களை ஏற்றிக்கொண்டு சென்ற உழவு இயந்திரம் (Tractres) களின் எண்ணிக்கை பற்றிய விபரமாகும்.

| ஒரு நாளின் விற்பனை ஆகிய டிரக்டர்களின் எண்ணிக்கை | 6-10 | 11-15 | 16-20 | 21-25 | 26-30 | 31-35 |
|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 2 | 3 | 5 | 9 | 3 | 2 |

(I) செங்கற்கள் விற்பனையாகிய மொத்த நாட்களின் எண்ணிக்கையை காண்க.
(II) ஆகார வகுப்பைக் காண்க.
(III) ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடு கொண்ட இடையாக கொண்டு நாளொன்றில் விற்பனையாகிய "டிரக்டர்களின்" எண்ணிக்கையைக் கிட்டிய முழு எண்ணில் காண்க.
(IV) இந்நிறுவனத்தின் வேலை செய்யும் 10 வேலையாட்களுக்கு ஒருவருக்கு நாளொன்றுக்கு 1200 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது. இயந்திரங்களுக்கு நாளொன்றிற்கு ரூபாய் 8500 படி 4 இற்கும் ஒரு பாதுகாப்பு ஊழியருக்கு மாதாந்த கொடுப்பனவாக 30, 000 ரூபா ஆகவும் வழங்கப்படுகிறது. "டிரக்டர்" ஒன்றின் நாளாந்த வருமானம் ரூபா.3300 கிடைக்குமாயின் நாளொன்றிற்கான இடை வருமானம் யாது?
(V) இவ்வியாபாரத்தின் மாதாந்த இடை வருமானம் யாது?

## பகுதி B

7) a) பாடசாலை ஒன்றில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு பொருட்காட்சியில் குறித்த ஒரு காட்சிக் கூடத்தில் வெளிப்பாடசாலை மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டியானது 10 வினாவைக் கொண்டுள்ளது. மேற்படி வினாக்களுக்கு சரியான விடையளிக்கும் போது பின்வருமாறு பரிசில்கள் வழங்கப்படுகின்றது.

- முதலாவது வினாவிற்கு ரூபா 500
- இரண்டாவது வினாவிற்கு ரூபா 750
- மூன்றாவது வினாவிற்கு ரூபா 1000

(I) மேற்கூறிய ஒழுங்கில் பரிசில்கள் வழங்கப்பட்டால் இது எத்தகைய தொடர் ஆகும்.
(II) 7 ஆவது வினாவுக்கு சரியாக விடையளிக்கும் போது பெறப்படும் பணத்தொகையைக் காண்க.
(III) nவது வினாவிற்கு சரியாக விடையளிக்கும் போது பெறப்படும் பணத் தொகைக்கான கோவையை n உறுப்புக்களில் தருக. (இங்கு $n<10$)
(IV) போட்டியாளர்கள் யாதாயினுமொரு வினாவிற்கு தவறாக விடை அளித்தால் அவர் அடுத்த வினாவிற்கு விடை அளிப்பதற்கான வாய்ப்பை இழப்பார். அத்துடன் 7 வினாக்களுக்கும் சரியான விடை அளித்தால் அவருக்கு மேலதிக கொடுப்பனவாக ரூ.1500 வழங்கப்படும். போட்டியாளர் ஏழு வினாக்களுக்கு சரியான விடை அளித்தார் எனின் அவர் பெற்ற பணப்பரிசில் பெறுமதியை காண்க.
(V) 10 போட்டியாளர் பங்குபற்றும் இந் நிகழ்ச்சியில் 10 பேரும் ஏழு வினாக்களுக்கு விடை அளித்தனர். மூன்று பேர் ஒன்பது வினாக்களுக்கு விடை அளித்தனர் எனின் போட்டியாளர் வழங்கிய பரிசுத்தொகை எவ்வளவு?


b) 12,6,3......என்ற தொடரின் ஆறாம் உறுப்பு $T_6$ எனவும் ஒன்பதாவது உறுப்பு $T_9$ எனவும் தரப்படின் $T_6 = 8\ T_9$ என காட்டுக.

8) பின்வரும் அமைப்புகளுக்கு cm/mm அளவிடை உள்ள நேர்விளிம்பு, கவராயம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்துக. அமைப்புக் கோடுகளைத் தெளிவாக காட்டுக.

(I) AB=10cm, AD=8cm, BD=7cm, ABC=105° ஆகவும் C ஆனது B,D எனும் புள்ளியிலிருந்து சமதூரத்தில் உள்ளவாறு நாற்பக்கல் ABCD ஐ அமைக்க.
(II) BD ஐ இணைத்து BD யிற்கு சமாந்தரமாக C யினூடாக ஓர் நேர்கோட்டை அமைக்க.
(III) $\Delta DBC$ இற்கு சமபரப்பளவுடைய $\Delta DBE$ ஐ அமைக்க. இங்கு E ஆனது நீட்டப்பட்ட AB யில் உள்ள ஒரு புள்ளியாகும்.
(IV) நாற்பக்கல் ABCD இன் பரப்பளவிற்கு சமபரப்புடைய முக்கோணத்தை பெயரிடுக.
(V) D,C யினூடு செல்லுகின்றதும் மையம் EC இல் அமைகிறதுமான வட்டத்தை அமைத்து ஆரையை அளந்து எழுதுக.

9) AB என்பது O ஐ மையமாகக்கொண்ட வட்டமொன்றின் விட்டமாகும். பரிதியில் உள்ள C எனும் புள்ளியிலிருந்து கீறப்படும் தொடலியை A,B யிலிருந்து கீறப்படும் தொடலிகள் P,Q இல்வெட்டுகின்றது.
$PA \times QB=1/4AB^2$ எனக் காட்டுக.


10) a) தரப்பட்ட வரிப்படத்தை பயன்படுத்தி




(I) AB யின் நீளத்தைக் காண்க.
(II) sinθ இன் பெறுமானம்.

b) மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் கரையோரப் பாதையொன்றின் இரு புள்ளிகள் a,b ஆகும். கடலிலுள்ள B எனும் கப்பலை A யிலிருந்து அவதானிக்கும் போது 060° திசைக்கோளிலும் 150mதூரத்திலும் உள்ளது.

(I) பரும்படி படமொன்றை வரைக.
(II) B யிலிருந்து AC யிற்கான மிகக் குறுகிய தூரம் BE எனின் அதை படத்தில் காட்டுக.
(III) BE இன் தூரத்தை கிட்டிய M இல் தருக.
(IV) BCE இன் பெறுமானத்தைக் காண்க.
(V) B யிலிருந்து C யின் திசைக்கோள் யாது?





11) 'fifa' உலக உதைபந்தாட்டத்தில் வெற்றி பெறும் அணி சம்பந்தமான எதிர்வுகூறல் ஆராய்ச்சி ஒன்று 50 உதைபந்தாட்ட சம்மேளன உறுப்பினர்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டது.

- ஜப்பானை தெரிவு செய்த உறுப்பினர்களின் எண்ணிக்கை -(J)-22, ஜேர்மனி ஐ தெரிவுசெய்த உறுப்பினர்களின் எண்ணிக்கை -(G)-23, பிரேசிலை தெரிவு செய்த உறுப்பினர்களின் எண்ணிக்கை - (B)-18
- 5 உறுப்பினர்கள் ஜேர்மனியையும் பிரேசிலையும் தெரிவு செய்தனர். ஆனால் ஜப்பானை தெரிவு செய்யவில்லை. 9 உறுப்பினர்கள் ஜப்பானையும் ஜேர்மனியையும் தெரிவு செய்தனர். 5 உறுப்பினர்கள் ஜப்பானையும் பிரேசிலையும் தெரிவு செய்தனர். 10 உறுப்பினர்கள் ஜப்பானை மட்டும் தெரிவு செய்தனர்.

(I) மூன்று நாடுகளையும் தெரிவு செய்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை காண்க.
(II) ஜேர்மனியை மட்டும் தெரிவு செய்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை காண்க.
(III) குறைந்தது ஒரு நாட்டையாவது தெரிவு செய்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை காண்க.
(IV) எந்தவொரு நாட்டையும் தெரிவு செய்யாதோரின் எண்ணிக்கையை காண்க.

b) BCA, n(A)=20, n(B)=7, $n(B^1)=19$ எனின் பொருத்தமான வென் உருவை வரைந்து $n(A)^1$ உம் n(ε)யும் காண்க.

12) சரிவகம் PQRS இன் PS,QR இன் நடுப்புள்ளிகள் முறையே X,Y ஆகும். PQ // SR ஆகவும் QRஇற்கு சமாந்தரமாக X இனூடாக கீறப்பட்ட கோடு PQ ஐ N இலும் நீட்டப்பட்ட RS ஐ M இலும் சந்திக்கின்றது.
PQ ஆனது SN இற்கு செங்குத்து, RQ=10cm, PQ=20cm, SN=8cm ஆயின்




(I) MN இன் நீளம் யாது?
(II) $\Delta PXN$ இற்கு ஒருங்கிசையக்கூடிய முக்கோணம் ஒன்றை பெயரிடுக.
(III) சரிவகம் PQRS இன் பரப்பளவிற்கு சமனான பரப்பளவை கொண்ட நாற்பக்கல் ஒன்றை பெயரிட்டு பரப்பளவை குறிப்பிடுக.
(IV) MX இற்கும் QY இற்கும் இடையிலான தொடர்புகளுக்கான காரணம் யாது?
(V) நாற்பக்கல் XYQN இற்கும் சரிவகம் PQRS இன் பரப்பளவிற்குமான தொடர்பு யாது?